நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை

தோற்றம்
14.09.1901

# செந்தமிழ்

பகுதி - 3
தொகுதி - 111
திருவள்ளுவர் ஆண்டு - 2047

திங்கள் இதழ்
விலை ரூ. 10
மார்ச் - 2017



# நான்காம் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் **நா.குமரன்சேதுபதி** | தலைவர் |
| மருத்துவர் **ந.சேதுராமன்** | துணைத் தலைவர் |
| வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி** | செயலாளர் |
| திருமதி. **இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி** | உறுப்பினர் |
| முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்** | உறுப்பினர் |
| பொறிஞர் **க.சி.அகமுடைநம்பி** | உறுப்பினர் |
| திரு. **இரா.சண்முகசுந்தரம்** I.R.S (ஓய்வு) | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **கே.ஆர்.என்.கருணாகரன்** | உறுப்பினர் |
| திரு. **அழ.சித்தையா** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **ச.தசரதராமன்** | உறுப்பினர் |
| திரு. **துரை கருணாநிதி** | உறுப்பினர் |
| திரு. **வி.சத்யநாராயணன்** | உறுப்பினர் |

## செந்தமிழ் கலை மற்றும் கீழ்திசைக் கல்லூரி

## கல்லூரிக்குழு

| | |
|---|---|
| வழக்குரைஞர் **ச.தசரதராமன்** | தலைவர் |
| திருமதி. **இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி** | செயலாளர் |
| வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி** | உறுப்பினர் |
| பொறிஞர் **க.சி.அகமுடைநம்பி** | உறுப்பினர் |
| திரு. **இரா.சண்முகசுந்தரம்** I.R.S (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. **அழ.சித்தையா** | உறுப்பினர் |
| திரு. **வி.சத்யநாராயணன்** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **து.மாயராசன்** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **சு.சிவசாமி** | உறுப்பினர் |
| பொறிஞர் **லெ.சிவக்குமார்** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **ஆர்.பாலாஜி** | உறுப்பினர் |
| திரு. **ஜெ.பாலதண்டாயுதம்** | உறுப்பினர் |
| முனைவர். **க.பாலகிருஷ்ணன்** பல்கலைக்கழக நியமன | உறுப்பினர் |
| முனைவர். **சு.விஜயன்** முதல்வர் (பொ) | உறுப்பினர் |
| முனைவர். **கி.வேணுகா** துணை முதல்வர் | உறுப்பினர் |
| முனைவர். **பா.நேருஜி** உதவிப்பேராசிரியர் | உறுப்பினர் |

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | இதழ் மணம் | 4 |
| 2. | தனக்குவமை இல்லாத் தனிப்பெரு நூல்-(9)<br>முதுமுனைவர் இரா.இளங்குமரனார் | 6 |
| 3. | தொல்காப்பியரும் செய்யிய வாய்பாட்டு வினையும்<br>இரா.கோதண்டராமன் | 11 |
| 4. | முதுமொழிக் காஞ்சி கூறும் அறங்கள்<br>பேராசிரியர் மு.மணிவேல் | 16 |
| 5. | உரையாசிரியர்களின் பிறப்பியல் கோட்பாடு<br>முனைவர். மு.கற்பகம் | 23 |
| 6. | இளங்கோவின் காப்பிய உத்தியும், குறிக்கோளும்<br>பேரறிஞர். தெ. திருஞானமூர்த்தி | 33 |
| 7. | சங்கச் செய்திகள் | 40 |



வலைதளம்: www.maduraitamilsangam.com
: www.senthamilcollege.com
மின்னஞ்சல் : maduraitamilsangam@yahoo.co.in
: principalsenthamilcollege@yahoo.co.in


| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 200 | ரூ. 1,000 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 2,000 | ரூ. 10,000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 10,000 | ரூ. 20,000 |
| தனி இதழ்க்கட்டணம் | ரூ. 10 | |

# இதழ் மணம்

தமிழ் வளர்ந்த வரலாறு இது; தமிழ் மறுமலர்ச்சிக் காலம்; தமிழறிஞர் மாணவர், ஆசிரியர் பலரும் பண்டை நூல்களைப் படிக்க வேண்டும் என்னும் வேட்கை நிறைந்த நாட்கள்; நூல்களை வெளியிட வேண்டும் என்னும் அறிஞர்களிடம் பொருள் தட்டுப்பாடு சிதம்பரம் புன்னைவனநாதர் அதற்கு விதி விலக்கு அல்லர்; அவர் உள்ளம் தொல்காப்பியம் நச்சினாருக்கினியர் உரையை வெளியிட அவாவியது. அதற்கு ஆயிரக் கணக்கில் பொருள் வேண்டும். பொருள் தன்னிடம் இல்லை என்றாலும் தொல்காப்பியத்தை தமிழ் மண்ணில் வேரூன்றச் செய்ய வேண்டும் என்னும் உறுதி தளரவில்லை. நச்சினார்க்கினியர் உரையிலிருந்து மூலத்தைப் பிரித்து எடுத்தார்; சூத்திரம் நுதல் பொருட்குறிப்புடன் பதிப்பித்தார்; காலம் கருதிச் செய்த இச்செயல் ஞாலத்தின் மாணப்பெரிதன்றோ! தொல்காப்பியம் முதலான பண்டை நூல்களைப் பதிப்பிக்கும் கடப்பாட்டு நெறியை தமிழ்ச் செம்மல் *இரா.இளங்குமரனார்* கட்டுரையில் விளக்கி வரைந்துள்ளார். உள்ளது சிதையாமல் பேணுவது உயிர் ஒம்பும் முயற்சி; அதுவே முதலும் மூலமும் சிறக்க வழி காட்டும். *சிதம்பரபுன்னைவனநாதர்* பதிப்பையும் தவத்திரு *அழகரடிகள்* பதிப்பையும் மறுபதிப்புக் கொண்டு வருதல் தமிழ் நூல் பதிப்பாளர் தம் கடப்பாடாகும்

நோக்கு குறித்து தமிழ்ச் செம்மல் *இரா.இளங்குமரனார்* "அதனை ஓர் உறுப்பு எனச் சுட்டினாலும் அது அவ்வொருமை கடந்த முழுமை தழுவியது" என்னும் விளக்கம் ஆழ்ந்த பொருளையும் கல்வியின் தோய்வையும் நுண்மையையும் உணர்த்துவதாகும்

பேராசிரியர் *இரா.கோதண்டராமன்* அவர்கள் *"தொல்காப்பியரும் செய்யிய வாய்பாட்டு வினையும்"* என்னும் தலைப்பில் கட்டுரை வரைந்துள்ளார். செய்யிய வாய்பாட்டின் தோற்றம், அவ்வாய்பாடு சங்க காலம் தொடங்கி இலக்கியத்தில் பயின்று வரும் வழக்கையும் நிகழ் காலத்தில் நாஞ்சில் நாட்டில் வேணாட்டுத் தமிழ் வழக்கில் பயின்று வருவதையும் ஆசிரியர் எடுத்துக்காட்டுகளுடன் விளக்கியுள்ளார். பேராசிரியர் *இரா.கோதண்டராமன்* இலக்கண இலக்கியப் பின்புலத்தோடு மொழியியல் துறையில் கற்றுத் துறைபோகிய சான்றோர் அவர்கள் மதுரைப் பல்கலைக்கழகத்தில் பணி ஆற்றிப் பின்பு புதுச்சேரியில் மொழித் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றார் பின்பும் தொடர்ந்து மாணவர் ஆசிரியர்களுக்கு ஆசானாக விளங்கும் ஆற்றல் சான்ற புலமை மிக்கவர். அவர்கள் தமிழ்ச் சங்கத்தின் வேண்டுதலை ஏற்று மாணவர் ஆசிரியர்

களுக்குப் பயன்படும் மொழியில் கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதவுள்ளார். அவருடைய கட்டுரை தொடர்ந்து செந்தமிழில் வெளிவரும். ஆசிரியர் மாணவர்கள் தக்கவாறு பயன் கொள்ளவும். கட்டுரையைப் படிக்கும் பெருமக்கள் தமிழ் மாணாக்கர் ஆசிரியர்களுக்கு இதழில் கட்டுரை வெளிவரும் செய்தியைத் தெரிவுக்கவும். அவர்களும் பயன் பெறுவர்.

பேராசிரியர் *மு.மணிவேல், "முதுமொழிக்காஞ்சி கூறும் அறங்கள்"* என்னும் தலைப்பில் எழுதியுள்ள கட்டுரை இடம் பெறுகிறது. வாழ்க்கை நடைமுறை உண்மைகளை நெஞ்சம் கொள்ளும் வகையில் ஒரு தொடரில் விளக்கும் முதுமொழிக்காஞ்சியின் மாண்பை வாசகர்களுக்கு அறிமுகப் படுத்தி நயம் பாராட்டி உரைக்கும் உரைத்திறம் காணத்தக்கது. அறநூல் கருத்துக்களை அவ்வப்போது கற்று மனத்தினும் சிந்தனையிலும் பதிய வைத்துக் கொள்வது வழி நடைக்குப் பயன்படும். பெரிய பாடல்களை விட சிறிய தொடர்கள் மூளையில் பதிந்து மனத்தைத்தொடும். முதுமொழிக்காஞ்சி இளம் சிறுவர்களுக்கு மனத்தில் பதிய வைக்க ஏற்ற தொடர் அமைப்புடையது. மாணவர் பாடநூல்களில் சேர்க்கத்தக்கது. ஆழ்ந்த பொருளும் உடையது. *"ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை"* என்னும் நூலின் தோற்றுவாய் நூலின் நோக்கும் போக்கும் காட்டி வாழ்க்கை இதுவென உணர்த்தும் நூலாசிரியரின் ஆளுமை எண்ணற்பாலது. நோக்கு–ஒழுக்கம்; போக்கு–வாழ்நாள் முழுவதும் கற்றல்; இதைவிடச் சிறந்த செய்தி உண்டா?

பேராசிரியர் *தெ.திருஞானமூர்த்தி* மெய்யியல் கோட்பாட்டிலும் நாடகத் துறையிலும் மிக்க ஈடுபாடுடைய தமிழறிஞர்.

உயிர்கள் தம் சொந்த முயற்சியினாலேயே பிறவித் தளையிலிருந்து விடுபட முடியும் எனச் சமணம் குறிப்பிடுவதனால் அதனை வழங்கும் ஆற்றல் அருகதேவனுக்கும் சாரணர்க்கும் இல்லை; வினையே செயல்படுகிறது என்பது காப்பிய ஆசிரியர் குறிக்கோள் என்பதை ஆசிரியர் கட்டுரையில் விளக்குகின்றார். நன்மை தீமைகளுக்குக் காரணம் வினை என்னும் கோட்பாடும் *"பெருநல் வேள்வி நீ செயல் வேண்டும்"* என வலியுறுத்துவதும் சரியான சிந்தனை மரபா? எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது.

பிறப்பியல் குறித்து முனைவர் மு.கற்பகம் எழுதியுள்ள கட்டுரை இவ்விதழில் இடம் பெறுகிறது.

++++++

9

முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**

நூல் சார்ந்த அளவில் *'நோக்கு'* பல வகைப்படும். *நூல் படைப்பார் நோக்கு, நூலுக்கு உரைகாண்பார் நோக்கு, நூலைப் பதிப்புச் செய்வார் நோக்கு, நூலைக் கற்பார் நோக்கு, நூலைக் கற்பிப்பார் நோக்கு* என ஒன்றனைச் சார்ந்த ஒன்றாக அமையும் நோக்குகள் அவை இவற்றுள் நூலைப் பதிப்புச் செய்வார் நோக்கு என்னும் பொதுமையும் தொல்காப்பியப் பதிப்பு என்னும் சிறப்புமையும் கொண்டது நாம் காணும் *'பதிப்பியல் நோக்கில் தொல்காப்பியம்'* என்பது.

தொல்காப்பியப் பதிப்பியல் நோக்கும் பொதுவகையால் மூவகைப் படக் காணல் வேண்டும் அவை 1. தொல்காப்பிய மூலப்பதிப்பு, 2. தொல்காப்பிய உரைப்பதிப்பு, 3. தொல்காப்பிய உரைக் களஞ்சியப் பதிப்பு என்பவை

தொல்காப்பியப் பதிப்பியல் நோக்கினைக் காணப்புகும் நாம் தொல்காப்பியர் கூறும் *'நோக்கு'* என்பது பற்றி எண்ணுதல் வேண்டும். தொல்காப்பியர் நோக்கினைச் செய்யுள் உறுப்புகளுள் ஒன்றாகக் கூறினார். அதனை ஓர் உறுப்பு எனச் சுட்டினாலும் அவ்வொருமை கடந்த முழுமை தழுவியது என்பதையும் விளக்கினார்

> *"மாத்திரை முதலா அடிநிலை காறும்*
> *நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே"*

என்பது அது (1364)

> *"மாத்திரை முதலா அடிநிலை காறும்"*

என்பதால் அவர் சுட்டுவன எவை எனில்,

> *"மாத்திரை எழுத்தியல் அசைவகை எனாஅ*
> *யாத்த சீரே அடியாப்பு எனாஅ"*

என்று சுட்டுவனவாம் (1263).

> *"அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே"*

என்று (1296) அவர் குறிப்பார் ஆதலின், அடியின் அளவில் அமைந்து நின்ற நோக்கு, பாவின் முழுமையும் தழுவியது என்பது புலப்படும். இம்முழுமைப் பார்வை தொல்காப்பியப் பதிப்பியலுக்குக் கொள்ளப்படுதல் வேண்டும் என்பது தொல்காப்பியர் வழியாகவே நாம் பின்பற்றல் கடமை என்பதாம்.

தனித்தனி மலரின் வனப்பும், அம்மலர் தொடையலாய்த் திகழும் வனப்பும், அத்தொடையல் அணியப் பெறும் தோன்றல் வனப்பும் ஒன்றனோடு ஒன்று இயைந்து பொலிவூட்டுவது போல், தொல்காப்பியப் பதிப்பின் எக்கூறும் சிறந்து முழுதுறு சிறப்பாகத் திகழ வேண்டும் என்பது தொல்காப்பியப் பதிப்பில் நம் நோக்காகி விடவேண்டும் என உறுதிப்படுத்தலாம்.

பதிப்புப்பணி அறங்கூறும் அவையப்பணி ஒப்பது. பதிப்பாசிரியர், *"தாம், நூலாசிரியர் அல்லர்"*; *"உரையாசிரியரும் அல்லர்"*; என்னும் உணர்வினராகக் கடமை புரியவேண்டும். ஆதலால், அவ்வாசிரியர்கள் உரிமையில் கைவைக்காமல் அவர்கள் உரிமையின் காப்பாளராக விளங்குதல் கட்டாயக் கடமையாகக் கொள்ளுதல் வேண்டும்.

மூலத்திலோ உரையிலோ பாட வேறுபாடு இருந்திருக்கக் கூடும் எனத் தெளிவாகத் தமக்குத் தென்பட்டால் கூட, தாமே பாடம் அமைத்துக் கொள்ள உரிமைப்பாடு உடையவர் அல்லர். ஓர் ஆவணத்தின் மூலத்தைத் திருத்துதல் எப்படிக் குற்றத்திற்கும் தண்டிப்பிற்கும் உரியதோ அப்படிக் குற்றத்திற்கும் தண்டிப்பிற்கும் உரியதாம் அது.

அத்தகு குற்றமானதோ, தாமே பாடம் மாற்றுதல் எனின், ஒருவர் ஓர் அசை மாற்றல் சீர்மாற்றல் மேற்கொள்ளல், அடுத்தவர் அடிமாற்ற, இடம் மாற்ற, ஊடு செறிக்க, உள்ளவை மறைக்க, மனம் போல் திரிக்க என ஆய், நூற்சிதைப்பாகவே ஆகிவிட வழிப்படுத்திவிடும். இந்நிலை இந்நாளில் சிலர் செய்துள்ள தொல்காப்பியப் பதிப்பு திருக்குறள் பதிப்பு என்பவற்றை நோக்கத் தானே விளக்கமாகும்.

> *"ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை*
> *ஊக்கார் அறிவுடை யார்"*

என்பது *அறத்தின் ஆணை* ஆதல் அறிக.

மூலப்பதிப்பு :

தொல்காப்பிய மூல, முதற்பதிப்பு 1922இல் சிதம்பர புன்னைவன நாத முதலியாரால் செய்யப்பட்டது. வெளியிட்டவர் மதுரை *பி.நா.சிதம்பர முதலியார்* புத்தகக் குழும்பினர்.

புன்னைவனநாதர், தொல்காப்பிய மூலப்படி கொண்டு பதிப்பித்தாரா? இல்லை! அவர் கூறுகிறார் :

*"தொல்காப்பியத்தை உரையுடன் பதிப்பிப்பதாயின் ஆயிரக் கணக்கான ரூபாய் செலவு பிடிக்கும்"* என உணர்ந்து *"தொல்காப்பிய மூலத்தையேனும் சூத்திரம் நுதல் பொருட் குறிப்புடன் பதிப்பித்தால் தாய்மொழிப்பற்றும் உணர்ச்சியும் மிகுந்துவரும் இக்காலத்தில் தமிழறிஞர் அதனை விருப்புடன் ஏற்றுப் போற்றுவர் என்று கருதலானேன்"* என மூலப்பதிப்பு வெளியிடுதலைத் தொடங்கினார்.

மூலத்தொகுப்புக்கு மூலப்படி வாய்த்திலது. அதனால், *"கிடைக்கக் கூடிய தொல்காப்பிய நச்சினார்க்கினியத்தை ஆதாரமாகக் கொண்டு மூல சூத்திரங்களை நுதல் பொருளுடன் பிரதி செய்ய ஆரம்பித்தனன்"* என்கிறார்

தொல்காப்பியம் மூலம் மட்டுமே அமைந்த சுவடிகள் இலவோ எனின், சென்னை உ.வே.சாமிநாதஅய்யர் நூலகத்தில் மூன்று சுவடிகள் (73, 115, 1053) இருந்துள. அவை, திருவனந்தபுரம் பன்னாட்டுத் திராவிட மொழியியற் கழகம் 1996 இல் வெளியிட்ட தொல்காப்பிய மூலப்பதிப்புக்குப் பயன்பட்டமை (பிற்சேர்க்கை–5) அறிய வருகின்றது.

அம்மூலச் சுவடிகள் மூன்றனுடன் வாய்த்த ஏட்டுச் சுவடிகள், கையெழுத்துப் படிகள், அச்சிடப்பட்ட பல்வேறு பதிப்புகள் என்பவற்றை யெல்லாம் ஒருங்கே கண்டு அரிய பெரிய உழைப்புடன் வெளிப்பட்டது *பன்னாட்டுத் திராவிட மொழியியற் கழகத் தொல்காப்பிய மூலப்பதிப்பு.* பாடவேறுபாடுகள் ஆழ்நோக்கு ஆய்வுகள் பயன்மிக்க பின் இணைப்புகள் விரிந்த ஆய்வு முன்னுரை என்பவற்றையெல்லாம் கொண்ட பாரிய பதிப்பு அது

அப்பதிப்பின்படி, தொல்காப்பிய நூற்பாக்கள் 1614 உள்ளன. தொல்காப்பிய அமைப்புப்பற்றிய பழைய பாடல்கள், *'ஆயிரத்தின் மேலும் அறுநூற்றுப் பஃது'* (1610) என்கின்றன.

எழுத்ததிகார நூற்பாக்கள்,

***"நானூற் றிருநாற்பான் மூன்று"*** (483)

சொல்லதிகார நூற்பாக்கள்,

***"நானூற் றறுபத்து நான்கு"*** (464)

பொருளதிகார நூற்பாக்கள்,

***"அறுநூற் றறுபத் தைந்து"*** (665)

தனித்தனி அதிகார நூற்பா எண்ணும், மொத்த நூற்பா எண்ணும் வேறுபடல் வெளிப்படை.

புன்னைவனநாதர் 1610 நூற்பா என்னும் வரம்புகொண்டு எழுத்து சொல் பொருள் ஆயவற்றுக்கு முறையே 483, 464, 665 என நூற்பாக்களை வரம்பிட்டார்.

எழுத்ததிகார நூற்பாக்கள் 483 என்றும் பொருளதிகார நூற்பாக்கள் 665 என்றும் கண்ட அவர் சொல்லதிகாரக் கிளவியாக்கம், வேற்றுமை மயங்கியல், உரியியல் ஆயவற்றில் நூற்பாக்கள் கூடியும் குறைந்தும் இருக்கக் கண்டார். ஒரு நூற்பாவின் முதலடியையோ இறுதியடியையோ தனிநூற்பாவாக்கி உரையெழுதியமை கண்டு தெளிந்தார் சேனாவரையர் நச்சினார்க்கினியர் உரைகளை ஒப்பிட்டு நூற்பா எண்ணிக்கையை 462 ஆக்கினார். இச்சிக்கல்களையெல்லாம் தம் பதிப்புரையில் விளக்கமாக எழுதுவதுடன் தொல்காப்பியப் பதிப்பு வரிசையையும் பதிவாக்குகின்றார். முதன் மூலப்பதிப்பு முயற்சி மிகப் பாராட்டுக்கு உரியதாக அமைந்தமை வேறு சில வகைகளாலும் புலப்படுகின்றன.

1. உரையாசிரியர்களாலும் பதிப்பாசிரியர்களாலும் சுட்டப்பட்ட பாட வேறுபாடுகள் அவர் பெயர்க் குறிப்புடன் குறித்த தலைப்பின் அடியில் பதிப்பிக்கப்பட்டமை.
2. ஒவ்வொரு நூற்பாவின் தலைப்பிலும் அந்நூற்பா சுட்டும் பொருள் நன்கு புலனாகுமாறு குறியீடு செய்தமை.

3. "இப்பதிப்பில் *அயர்வாலும் தளர்வாலும்* ஏற்பட்ட சில பிழைகளைப் பிழை திருத்தமாகச் சேர்த்து வாசிப்போரை அதற்கியையத் திருத்திக் கொள்ளுமாறு கட்டப்படுத்தாமல் அச்சிலவற்றை *'யானே கையாற் றிருத்தியுள்ளேன்'*" என்னும் பொறுப்புணர்வு.

கா.நமச்சிவாய முதலியார் எழுத்து சொல் (1922) பொருள் (1924) மூலப்பதிப்புகள் பாடவேறுபாட்டுடன் வெளியிட்டார்.

இம்மூலப்பதிப்புகள் இயன்று இருபத்தோராண்டுகளின் பின் (1943) திருநெல்வேலி தென்னிந்திய *சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்* மூலப்பதிப்பு வெளியிட்டது. அப்பதிப்புச் செய்தவர் *தவத்திரு. இளவழகனார்.* அப்பதிப்பின் சிறப்பு, நூற்பாவின் பொருள் விளங்கிப் பயிலுமாறு வரையப்பட்ட அடிக்குறிப்புகள் ஆகும். அப்பதிப்பு முற்பதிப்புப் போல் பாடவேறுபாடு காட்டிற்றில்லை அடுத்து வந்த மூலப்பதிப்பு *'மர்ரே இராசம்'* பதிப்பாகும் (1960). அதன் மீள் பதிப்பு *'நியூ செஞ்சுரி'* பதிப்பு (1981).

முன்னிரு பதிப்புகளிலும் கண்ட நூற்பாத் தலைப்புக் குறிப்போ, நூற்பா எண் தொடர்ச்சியோ இல்லை. எளிதாகப் புரியவைத்தல் என்னும் நோக்கில் சந்திபிரிப்பையே பெரிதாகக் கொண்டவை இப்பதிப்புகள்.

நூல் தொடர் எண், அதிகாரத் தொடர் எண், இயல்தொடர் எண் என முத்தொடர் எண்களையும், பாடவேறுபாடுகளையும், அடிக்குறிப்புகளையும் வேண்டும் இணைப்புகளையும் ஒருங்கே கொண்ட உயர்ந்த எடுத்துக்காட்டாம் பதிப்பு, பன்னாட்டுத்திராவிட மொழியியற் கழகப் பதிப்பு ஆகும். கழகப் பதிப்புக் கொண்ட நூற்பாப் பொருள் விளக்க அடிக்குறிப்போ, புன்னைவனநாதர் மேற்கொண்ட நூற்பாத் தலைப்பு விளக்கக் குறிப்போ இப்பதிப்பில் இடம் பெறாமை, *'கண்ட தொன்றைக் கைநழுவ விட்ட'* தெனத் தோன்றச் செய்கின்றது!

# தொல்காப்பியரும் செய்யிய வாய்பாட்டு வினையும்

**இரா.கோதண்டராமன்,**
தொல்காப்பியர் அடிப்படை ஆய்வு மையம்,
19, தொல்காப்பியர் தெரு, அசோக்நகர்,
புதுச்சேரி–605008
கைபேசி . 94431 51044

கன்னியாகுமரி மாவட்டத்தை மொழி அடிப்படையில் இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று, நாஞ்சில் நாடு; பிறிதொன்று, வேணாடு. தோவாளை, அகத்தீச்சுரம் ஆகிய வருவாய் வட்டங்களும் அவற்றைச் சார்ந்த பகுதிகளும் நாஞ்சில் நாடு எனப்படும். குமரிமாவட்டத்தில் வழங்கும் பேச்சுத் தமிழை நாஞ்சில் தமிழ் என்றும் வேணாட்டுத் தமிழ் என்றும் இரு பிரிவுகளாக இனங்காணமுடியும். இந்த இரண்டு வகைத் தமிழும் இரண்டு வகைக் கிளைமொழிகளாகும். இந்தக் கிளைமொழிகளில் துணைக் கிளைமொழிகளும் உண்டு. குறிப்பாக வேணாட்டுக் கிளை மொழியில் இதனைக் காணலாம்.

2. தொல்காப்பியர் *செய்து, செய்யூ, செய்பு, செய்தென, செய்யியர், செய்யிய, செயின், செய, செயற்கு* என ஒன்பது வகை வினையெச்சங்களைக் குறிப்பிடுவார் (சொல் சேனா.228). இவை அனைத்தும் தொல்காப்பியருக்கு முன்னும் பின்னும் தோன்றிய சங்க இலக்கியங்களிலும் அவற்றுக்குப் பிறகு தோன்றிய காப்பியங்களிலும் பக்தி இலக்கியங்களிலும் வழங்கினாலும் செய்யிய வாய்பாட்டு எச்ச வினைகளும் அவற்றைச் சார்ந்த இறவாக்கால வினைமுற்றுக்களும் இன்றளவும் வேணாட்டுப் பேச்சுத் தமிழில் பயின்று வழங்குகின்றன செய்யியர் வாய்பாட்டு வினையெச்சங்கள சங்க இலக்கியங்களில் வழங்கினாலும் வேணாட்டுப் பேச்சு வழக்கில் அவற்றின் நிகழ்ச்சி காணப்படவில்லை. ஆயினும் அவற்றின் தோற்றமும் வேணாட்டுப் பகுதியிலேயே நிகழ்ந்திருக்க வேண்டும் எனக் கருதலாம் எனவே தொல்காப்பியரை வேணாட்டைச் சேர்ந்தவராகத் துணியலாம்.

3. செய்யியர், செய்யிய ஆகிய இரண்டு வாய்பாட்டு வினைகளும் சங்கத் தமிழில் வியங்கோள் வினைகளாகவும் வினையெச்சங்களாகவும் செயல்படுகின்றன. கருதுக:

*1. நீவா ழியர்நின் தந்தை*
*தாய்வா ழியர்நிற் பயந்திசி னோரே*

(புறம்.137, 14,15)

*2. வாழிய பெருமநின் வரம்பில் படைப்பே* (புறம். 22.30)

இந்த இரண்டு எடுத்துக்காட்டுகளிலும் வாழியர், வாழிய ஆகிய இரண்டும் வியங்கோள் வினைகளாகும்.

*3. … … தூமணற் சேர்ப்பனை*
*யானும் காதலென் யாயு(ம்)நனி வெய்யள்*
*எந்தையும் கொடீஇயர் வேண்டும்* (குறு.51.3–5)

*4. … … கொடுஞ்சிறைப் பறவை*
……………………………………
*பிள்ளை உள்வாய்ச் செரீஇய*
*இரைகொண்ட மையின் விரையுமாற் செலவே*

(குறு.92,2,4,5)

இந்த இரண்டு எடுத்துக்காட்டுகளிலும் நிகழும் *கொடீஇயர்* 'கொடுக்க', *செரிஇ*ய 'செருக' ஆகியவை வினையெச்சங்களாகச் செயல்படுகின்றன.

4.வல்வினை சார்ந்த *பறிக்கிய, தேய்க்கிய, கலைக்கிய* போன்ற செய்யிய வாய்பாட்டு வினையெச்சங்கள் செயவென் எச்ச வல்வினைகளை அடிநிலை வடிவங்களாகக் கொண்டவையாகும். வினைத் திரிபில் இரண்டு வல்லொற்றுக்கள் நிகழ்ந்தால் அவை வல்வினைகள் என்றும் ஏனையவை மெல்வினைகள் என்றும் அறியப்படும். இந்த ஆய்வில் இகரவீற்று வினையடிகள், யகரவீற்று வினையடிகள், ஐகாரவீற்று வினையடிகள் ஆகிய

மூவகை வாய்பாட்டு வல்வினைகள் கருத்தில் கொள்ளப்படுகின்றன செய்யிய வாய்பாட்டு வினைகளில் இரண்டாம் அசையில் நிகழும் யகரம் வினையடி ஈற்றில் நிகழ்ந்து தானாகவே இடம் பெயர்ந்தோ அல்லது படியெடுக்கப்பட்டு இடம்பெயர்ந்தோ நகர்வதாகும இந்த இடப்பெயர்ச்சியானது ஆய்வில் மிக முக்கியமானதாகும். இதனைக் கருத்தில் கொண்டு இகரவீற்று வினையடிகள் யகரவீற்றினவாக அகமீட்டுருவாக்கம் (Internal reconstruction) செய்யப்படும். எடுத்துக்காட்டாக, *குடி* என்ற வினையடியானது *குடிய் என மீட்டுருவாக்கப்படும். *மேய்* போன்ற வல்வினையடிகள் இயல்பாகவே யகரவீற்றினவாகும் விளை என்ற ஐகாரவீற்று வினையடி, எடுத்துக்காட்டாக அய் ஈற்றினதாகக் கொள்ளப்படும் உண்மையும் அதுதான்.

5 மேலே குறிப்பிட்ட மூன்று வினையடிகளும் வல்வினைகளாகும். இவற்றின் அடியாகத் தோன்றும் செயவென் எச்ச வினைகள் **குடிய்க்க, மேய்க்க, விளய்க்க* என அமையும் இவற்றினின்றும் குடிக்கிய (குறு.356.4) மேய்க்கிய (நம் திருவாய்.10.3.5), விளய்க்கிய (=விளைக்கிய) (சீ.சி2867) ஆகிய செய்யிய வாய்பாட்டு வினைகள் பின்வருமாறு வருவிக்கப்படும்.

5. 1) *குடிய்க்க > குடிக்க (பொதுவழக்கு)

2) 1) *குடிய்க்க > குடிக்க்ய (ய்க்க் > க்க்ய்)

2) *குடிக்க்ய > குடிக்கிய (க்க்ய் > க்கிய்)

வினையடியீற்று யகரம் இடம்பெயர்ந்து இரட்டித்த வல்லொற்றுக்களை அடுத்து நிலைகொள்கிறது காண்க: விதி 5(2)(1). யகரத்தின் இன உயிர் இகரமாகலின் இரட்டித்த வல்லொற்றையடுத்து ஒலித்துணை உயிராக இடம்பெறுகிறது. காண்க : விதி.5(2)(2). இதன் விளைவாக, குடிக்கிய என்ற எச்சவினை தோன்றி நிகழ்கிறது. வண்ணனை ஆய்வில் குடி, **குடிய்* இரண்டும் சார்ந்துருபுகள் (*Allomorphs*) ஆகும்.

6 (1) மேய்க்க் > மேய்க்க்ய (ய்க்க் > ய்க்க்ய்)

(2) மேய்க்க்ய் > மேய்க்கிய (ய்க்க்ய் > ய்க்கிய்)

7 (1) விளய்க்க > விளய்க்க்ய (ய்க்க் > ய்க்க்ய்)

(2) விளய்க்க்ய > விளய்க்கிய (ய்க்க்ய் > ய்க்கிய்)

இந்த இரண்டு ஆய்விலும் வினையீற்று யகரம் இடம்பெயரவில்லை. மாறாக, அது படியெடுக்கப்பட்டு இரட்டித்த வல்லொற்றுக்களை அடுத்து நிலைகொள்கிறது. வினையடியீற்றில் யகரம் இல்லை என்றால் செய்யிய வாய்பாட்டு வினைகளின் அமைப்பினை விளக்கமுடியாமற் போய்விடும். யகரத்தின் இன உயிராகிய இகரத்திற்கு இந்த ஆய்வில் இலக்கணச் சிறப்பு ஏதுமில்லை. ஆயினும் செய்யிய வாய்பாட்டு வினைகளைச் செய்+இய என்றுதான் தொல்காப்பியம், நன்னூல் போன்ற வண்ணனை இலக்கணங்கள் (Synchronic Grammars) விளக்கியாக வேண்டும்.

6. தொல்காப்பியம் ஒரு வண்ணனை இலக்கணம் ஆகும். எனவே *குடிக்கிய, மேய்க்கிய, விளைக்கிய* ஆகிய வாய்பாட்டு வினைகள் முறையே குடிக்க (< *குடிய்க்க), *மேய்க்க, விளய்க்க* (=விளைக்க) ஆகிய வாய்பாட்டு வினைகளை வண்ணனை நிலையில் அடிநிலை வடிவங்களாகக் கொண்டு விளக்க வேண்டிய அவசியம் இல்லை. எனவேதான் செய்யிய வாய்பாட்டு வினைகள் செய்+இய என்ற அமைப்பினதாக விளக்கப்படுகிறது. இந்த அமைப்பில் நிகழும் –இய என்னும் எச்ச விகுதி எல்லா வினைகளுக்கும் ஒப்புமையாக்க நீட்சியின் (Analogical Extension) வாயிலாக விரிவுபடுத்தப்பட்டுக் *கொடுக்கிய கேட்கிய, நிற்கிய, காணிய, உண்ணிய, செரீஇய* (<*செருகு+இய) முதலான வினைகள் பழந்தமிழ் இலக்கியங்களில் தோன்றி நிகழ்கின்றன.

7. செய்யிய வாய்பாட்டு வினைகள் மட்டுமல்ல, அவற்றைச் சார்ந்த *குடிக்கியான், நடக்கியான், பேசியான், சொல்லியான்* போன்ற நிகழ்கால வினைமுற்றுக்களும் இன்றும் வேணாட்டுப் பகுதியில் வழங்கி வருகின்றன.

உரைக்கியம் (நம்.திருவிருத்தம்.55) என்ற தன்மைப் பன்மை எதிர்கால வினையும் இவ்வாறு அமைந்ததேயாகும். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டே தொல்காப்பியர் குமரிமாவட்டத்தைச் சேர்ந்த வேணாட்டுப் பகுதியினர் என்ற கருதுகோள் முன்வைக்கப்படுகிறது.

8. செய்யியர், செய்யிய வாய்பாட்டு வியங்கோள் வினைகளும் மேற்கண்ட முறையில் வேணாட்டுப் பகுதியில் கால்கொண்டு செவ்வியல் வழக்கில் இடம்பெற்றிருக்க வேண்டும். எனவே இவற்றின் தோற்றமும் செய்யிய வாய்பாட்டு எச்சவினைகளைப் போன்றதேயாகும்.

**சுருக்க விளக்கம் :**

குறு – குறுந்தொகை

*சீ.சி* – *சீவகசிந்தாமணி*

சொல் – சொல்லதிகாரம்

திருவாய் – திருவாய்மொழி

தொல் – தொல்காப்பியம்

நம் – நம்மாழ்வார்

# 'முதுமொழிக் காஞ்சி கூறும் அறங்கள்'

பேராசிரியர் **மு.மணிவேல்,**
தலைவர், தமிழியல் துறை (ப.நி),
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை–625 020.
அலைபேசி : 98655 34622

உலக மொழிகளில் தொன்மையான மொழி தமிழ். உலகச் செம்மொழி களில் ஒன்றாகவும் போற்றப்படுகிறது இம்மொழி கி.மு. பல நூற்றாண்டுகளுக்கு முன்னரான இலக்கிய, இலக்கணத் தோற்றமும் வளர்ச்சியும் உடையது இம்மொழியின் முதல் இலக்கியங்களாக விளங்கும் சங்க இலக்கியங்களான பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்; சிலப்பதிகாரம், மணிமேகலைக் காப்பியங்கள்; முத்தொள்ளாயிரம்; தொல்காப்பியம், இறையனாரகப் பொருள் ஆகிய இலக்கண நூல்கள் என்பவையெல்லாம் சேரத் தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள் எனப் போற்றப்படுகின்றன. தமிழின் பிற்கால இலக்கியங்களின் வளர்ச்சியெல்லாம் இச் செவ்வியல் இலக்கியங்களின் அடியாகத் தோன்றி வளர்ந்தவையாகக் கருதலாம்.

தமிழ இலக்கியங்களின் கருத்தியல் நிலையில் அகம், புறம், அறம், சமயம், சமூகம் என்றிவ்வாறாகப் பொருண்மை சார்ந்த இலக்கிய வகைகள் அமையப் பெற்றுள்ளன எல்லா வகையான தமிழ் இலக்கிய வகைகளுக்கும் சிறப்பும் மதிப்பும் உண்டெனினும் தமிழ் அற இலக்கியங்களின் மேன்மையும் பயன்பாடும் மிகுதி. சங்க காலத்தின் தொடர்ச்சியான, சங்கம் மருவிய காலப் பகுதியில் சமண, பௌத்த சமய வடிவில், களப்பிரர்களின் தமிழக ஆளுமையில் அற இலக்கியங்கள் பல தோன்றின அவ்வகையில் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களாகப் பேசப்படுகின்ற நூல்களில் திருக்குறள், நாலடியார், பழமொழி நானூறு, ஆசாரக்கோவை, நான்மணிக்கடிகை, திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, முதுமொழிக் காஞ்சி என்னும் பதினொரு நூல்கள் முழுமையும் வாழ்வியல் அறங்களைக் கூறுவனவாக அமையப் பெற்றுள்ளன இவற்றின் தொடர்ச்சியாக இடைக்காலத்தும் பிற்காலத்தும், குமர குருபரர், சிவப்பிரகாசர், ஔவையார், அதிவீரராம பாண்டியர், உலகநாதர் போன்றோர் வழங்கிய நீதிநூல்கள் பலவும் தமிழ் இலக்கிய வரலாற்று அற ஆவண நூல்களாகக் கிடைக்கப் பெற்றுள்ளன

அறம், பொருள், இன்பம், வீடு சார்ந்த வாழ்வியலை, அறநூல் படைத்தோர் தம் புலமைத் திறம் வெளிப்பட, பல்வகை உத்திகளில் நேர்ப்படவும், எதிர்ப்படவும்

உணர்த்தியுள்ளனர். அவ்வகையில் *'முதுமொழிக் காஞ்சி'* எனப் பெயரிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான, மதுரைக் கூடலூர் கிழார் என்பார் இயற்றிய அறநூற் செய்திகளை இக்கட்டுரை எடுத்துரைப்பதாக அமைகின்றது.

*'காஞ்சி'* என்பது நிலையாமைப் பொருண்மை கூறும் ஒரு புறத் திணையாகும். இலக்கண நூல்கள் கூறும் *'முதுமொழிக் காஞ்சி'* என்பது காஞ்சித் திணையின் ஒரு துறையாகக் கூறப் பெற்றுள்ளது.

> *"பலர்புகழ் புலவர் பன்னினர் தெரியும்*
> *உலகியல் பொருள்முடிபு உணரக் கூறின்று"*

எனப் புறப்பொருள் வெண்பாமாலை முதுமொழிக்காஞ்சியின் பொருளாகக் கூறும். குற்றம் நீங்கிய அறம், பொருள் இன்பங்களை அறிவுடையார் அறியச் சொல்லுவது முதுமொழிக் காஞ்சியாகும். *'காஞ்சி'* என்பதற்குக் கோவை, கோர்வை எனும் பொருளும் உண்டு. அவ்வகையில் முதுமொழிக் காஞ்சி என்பதற்கு *'அறிவுரைக் கோவை'* எனப் பொருள் கூறலாம். வாழ்வியலுக்கான அறிவுரைகளைத் தொகுத்தும், பகுத்தும் சுருங்க உரைக்கும் நூலாக முதுமொழிக் காஞ்சி விளங்குகின்றது.

*'முதுமொழிக் காஞ்சி'* பாடிய *'கூடலூர் கிழார்'* எனும் பெயரில் –ஐங்குறு நூற்றினைத் தொகுத்தமைத்தவர் பெயரும், பதிற்றுப்பத்தில் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலைப் பாடியவர் பெயரும் மதுரைக் கூடலூர்கிழார் என அறியப் பெற்றுள்ளது. எனினும் பாடலமைவு, பாடற் செய்தி, பாடிய முறை என்ற வகைகளில் *'முதுமொழிக் காஞ்சி'* அறநூல் பாடிய ஆசிரியர் மதுரைக் கூடலூர்கிழார் தனித்து விளங்குகிறார்.

முதுமொழிக் காஞ்சி நூலின் கட்டமைப்பும், அது கூறும் செய்திகளும் தனித்தன்மை உடையன. நூறு ஒரு வரிப் பாடல்களைக் கொண்டமைந்த நூல் இது. ஒவ்வொரு செய்யுளும் ஒரு முதுமொழி. ஒவ்வொன்றும் நான்கு அல்லது ஐந்து சீர்களில் அமையப் பெற்றது. ஒவ்வொன்றும் வெண் செந்துறைப் பாட்டு; ஒழுகிய ஓசை உடையது. நூல் முழுமையும் பத்துப்பத்து ஓரடிச் செய்யுள்களைக் கொண்ட பத்து அதிகாரங்களைக் கொண்டமைந்தது. 1.சிறந்தபத்து 2.அறிவுப்பத்து 3.பழியாப்பத்து 4.துவ்வாப்பத்து 5.அல்லபத்து 6.இல்லைப்பத்து 7.பொய்ப்பத்து 8.எளியபத்து *9.நல்கூர்ந்தபத்து 10. தண்டப்பத்து* என்பன

இந்நூலில் அமையப் பெற்ற அதிகாரங்கள். திருக்குறள், நாலடியார் போல அதிகார வைப்புப் பெற்ற நூல் இது. ஐங்குறு நூற்றின் கூற்று, உட்கருத்தான உரிப்பொருட் துறை, கருப்பொருள் குறிக்குமாறு பத்துப் பத்துப் பாடல்களைத் தொகுத்தமைத்திருப்பது போல ஒரு கருத்து–பத்துப் பாடல் என்றவாறு பகுத்து அதிகாரம் அமையப் பெற்றுள்ளது.

சிறந்தமை, அறிவுடைமை, பழிக்கப்படாதவை, எளியவை, பொய்யானவை என்றிவ்வாறானவை குறித்த செய்திகளை முதுமொழிக் காஞ்சி கூறுகின்றது. பிற்காலத்து *'ஆத்திசூடி'* நூல்கள் போல அவற்றிற்கு முன்னே, முதல் நூலாய் அறம் சொல்லியிருக்கும் நூல் இது. ஒவ்வொரு பத்தின் தொடக்கமும்,

*"ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்"*

என்று தொடங்கி அறம் சொல்வதாக அமைகின்றது. தமிழர்க்கு மட்டுமன்றி உலகோர்க்கெல்லாம் வேண்டுவனவான அறச் செய்திகளைக் கூறுவதாக, அவற்றை முன்மொழிகின்ற சிறப்பு இந்நூலிற்குண்டு.

முதற்பத்தில் சிறந்தன பற்றி இந்நூலாசிரியர் கூறுவனவற்றைக் *காணலாம்:*

1. *"ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை"*
2. *"காதலிற் சிறந்தன்று கண்ணஞ்சப் படுதல்"*
3. *"மேதையில் சிறந்தன்று கற்றது மறவாமை"*
4. *"வண்மையில் சிறந்தன்று வாய்மை உடைமை"*
5. *"இளமையில் சிறந்தன்று மெய்ப்பிணி இன்மை"*
6. *"நலனுடைமையின் நாணுச் சிறந்தன்று"*
7. *"குலனுடைமையின் கற்புச் சிறந்தன்று"*
8. *"கற்றலில் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று"*
9. *"செற்றாரைச் செறுத்தலின் தற்செய்கை சிறந்தன்று"*
10. *"முற்பெருகலின் பின் சிறுகாமை சிறந்தன்று"*

இப்பத்துச் செய்யுட் தொடர்களில் கற்றல், அன்பு, அறிவு, நுட்பம், வளமை, இளமை, அழகு, உயர்குலம், கற்றறிதல், பகை நீக்கல், முற்பெருக்கல் என்பன சிறந்தன எனக் கூறும் நூலாசிரியர் இவற்றினும், ஒன்றோடு ஒன்று ஒப்பு நோக்கி ஒழுக்கம், பிறரால் மதிக்கப்படுதல், கற்றது மறவாமை, வாய்மை, பிணியின்மை, நாணம், கற்பு, கற்றாரை வழிபடுதல், தன்னை மேம்படுத்தல்,

தாழாமை என்பன மிகச் சிறந்தன எனச் சிறந்தனவாக இருபது பொருண்மைகளை எடுத்துரைக்கும் சிறப்பு குறிக்கத்தக்கதாகும். இவை வேண்டத்தக்கன, கைக் கொள்ளத்தக்கன, போற்றத்தக்கன என்பதாக அறிவுறுத்தல் செய்யப் பெற்றுள்ளன.

இரண்டாவது பத்தில் அறியத்தக்கவற்றை அறிதலும் அவற்றை எவற்றால் அறியவியலும் என்பதை முதுமொழிக் காஞ்சி கூறுகின்றது.

*"பேரில் பிறந்தமை ஈரத்தின் அறிப"* (11)
*"ஈரம் உடைமை ஈகையின் அறிப"* (12)
*"சோரா நல்நட்பு உதவியின் அறிப"* (13)
*"கற்றது உடைமை காட்சியின் அறிப"* (14)
*"சிற்றில் பிறந்தமை பெருமிதத்தின் அறிப"* (16)

என்றிவ்வாறு *'அறிவுப்பத்து'* பகுதியில் அறிந்துணரும் திறமும் அறிதற் குரியனவும் பற்றிக் கூறப் பெற்றுள்ளது. உயர்குடிப் பிறப்பினை அக்குடியின் அருட்சிறப்பால் அறியலாம்; அருட்திறத்தை கொடையால் அறியலாம்; நீங்காத நட்பினை உதவியால் அறியலாம்; கற்ற மேன்மையை அறிவு வெளிப்பாட்டால் அறியலாம். தாழ்குலத் தன்மையைச் செருக்கால் அறியலாம் என்பன மேற்குறித்தனவற்றில் கூறப் பெற்றுள்ளன.

உறுதியில்லாத இயல்பினரான அடங்காதாரைச் சான்றோர் பழிக்க மாட்டார்கள்; பெருமையில்லாதாரைப் பெருமிதம் உடையோர் பழிக்க மாட்டார்கள்; கீழோர் ஒழுக்கத்தைச் சிறுந்தோர் பழிக்க மாட்டார்கள்; அறியாத் தேசத்து ஆசாரங்களையும் வறியோனின் கொடையின்மையையும் பழிக்க மாட்டார்கள் எனப் பழியாப் பத்தில் முதுமொழிக்காஞ்சி ஆசிரியர் கூறுகின்றார்.

*"யாப்பி லோரை இயல்குணம் பழியார்"* (21)
*"மீப்பி லோரை மீக்குணம் பழியார்"* (22)
*"சிறியார் ஒழுக்கம் சிறந்தோரும் பழியார் "* (30)
*"அறியாத் தேசத்து ஆசாரம் பழியார்"* (28)
*"வறியோன் வள்ளியன் அன்மை பழியார்"* (29)

என்பன மேற்குறித்ததற்கான பாடற் தொடர்கள்

ஒருவரை விட்டு நீங்காதவை எவை எனவும் முதுமொழிக் காஞ்சி கூறுகின்றது. எதனால் எது நீங்காது, யாரைவிட்டு எது எதனால் நீங்காது என்றெல்லாம் இந்நூல் குறிப்பிடுகின்றது. இங்ஙனம் கூறுமாறு அமைந்த பாடற்தொடர்கள் சில வருமாறு :

*"பழியோர் செல்வம் வறுமையில் துவ்வாது"* (31)
*"நாணில் வாழ்க்கை பசித்தலின் துவ்வாது"* (33)
*"பேணில் வாழ்க்கை மாற்றலின் துவ்வாது"* (34)
*"செய்யாமை மேற்கொள் சிதடியின் துவ்வாது"* (35)
*"அறிவிலி துணைப்பாடு தனிமையில் துவ்வாது"* (38)
*"தானோர் இன்புறல் தனிமையின் துவ்வாது"* (40)

இவற்றால் கொள்ளத்தக்கன, தள்ளத்தக்கன, செய்யத்தக்கன, பேணத்தக்கன கூறப் பெற்றுள்ளமை அறியலாம்.

*'அல்ல பத்து'* என்பது இந்நூலின் ஐந்தாவது பகுதி அல்லள், அல்லன், அன்று என்னும் சொற்களைப் பயன்படுத்தி அறம், ஒழுக்கம், உலகியல் குறித்தன கூறப் பெற்றுள்ளன. அவற்றுள் சில இங்குக் குறிக்கத்தக்கன.

*"நீரறிந்து ஒழுகாதாள் தாரம் அல்லள்"* (41)
*"தாரம் மாணாதது வாழ்க்கை அன்று"* (42)
*"ஈரம் இல்லாதது கிளைநட்பு அன்று"* (43)
*"சோராக் கையன் சொல்மாலை அல்லன்"* (44)
*"நேரா நெஞ்சத்தோன் நட்டோன் அல்லன்"* (45)
*"திறத்தாற்றின் நோலா நோன்பு அன்று"* (49)

கணவன் இயல்பறிந்து ஒழுகாதவள் மனைவி அல்லள்; மனைவியோடு இல்லாத இல்லறம் இல்லறம் அன்று; அன்பில்லாத தொடர்பு உறவாகாது; ஈகை செய்யாதவன் புகழ் பெறமாட்டான்; ஒன்றாத நெஞ்சத்தான் நண்பன் அல்லன்; தகுதியில்லாத தவம் தவம் அன்று என்பன பற்றிக் குறித்துக் கூறுவன இவை.

எதனால் எது இல்லை; சிறப்புடையதும் சிறப்பில்லாததும் எவை? என்பனவற்றையும் முதுமொழிக் காஞ்சி ஆசிரியர் கூறுகின்றார். மக்கட் பேற்றினும் பெறும் பேறு வேறு இல்லை; செயலறிந்து செயலின் தகுதியானது இல்லை; ஆசையினும் பெரிய வறுமை வேறு இல்லை; இரத்தலின் இகழ்ச்சி இல்லை; இரப்போர்க்கு ஈதலினும் சிறப்பில்லை; கொடுக்க இயல்வதைக் கொடுத்தல் வேண்டும் என்பன உணர்த்தப் பெற்றுள்ளன.

பொய்யானவை பற்றியும் முதுமொழிக் காஞ்சி நூல் கூறுகின்றது

*"பேரறிவாளன் இனிது வாழாமை பொய்"* (61)
*"காலம் அறியாதோன் கையுறல் பொய்"* (64)

*"பெருமை நோனாதோன் சிறுமை வேண்டல் பொய்"* (68)
*"சிறுமை நோனாதோன் பெருமை வேண்டல் பொய்"* (69)

என்பனவற்றால் நல்லறிவாளன் நல்வாழ்வு பெறுவான்; காலமறிந்து செயல்படாதவன் செயல் முடிக்க மாட்டான்; பெருமைச் செருக்கில்லாதவன் சிறுமை அடைய மாட்டான்; பணிவில்லாதான் உயர்வடையமாட்டான் என்பனவும், உள்ளத்தூய்மை இல்லாதவன் தவம் செய்தல் பொய்; எதிர்காலம் அறியாதவன் தன்னைக் காத்தல் செய்யான்; பொருளாசை உடையவன் அறம் செய்யான் என்பனவும் இப்பத்தில் கூறப் பெற்றுள்ளன

யாருக்கு, எச்செயல் உடையோர்க்கு எவையெல்லாம் எளிது என்று கூறும் பத்துத் தொடர்ப் பாடல்கள் எட்டாம் பத்தான எளிய பத்தில் அமையப் பெற்றுள்ளன:

*"புகழ் வெய்யோர்க்கு புத்தேள் நாடு எளிது"* (71)
*"உறழ் வெய்யோர்க்கு உறுசெரு எளிது"* (72)
*"ஈரம் வெய்யோர்க்கு நசை கொடை எளிது"* (75)
*"துன்பம் வெய்யோர்க்கு இன்பம் எளிது"* (74)
*"இன்பம் வெய்யோர்க்குத் துன்பம் எளிது"* (75)
*"உண்டி வெய்யோர்க்கு உறுபிணி எளிது"* (77)
*"பாரம் வெய்யோர்க்குப் பாத்தூண் எளிது"* (79)

என்பனவற்றால் உணர்த்தப் பெற்றுள்ள செய்திகள் உணரத்தக்கன எதை நோக்கி, எதை விரும்பிச் செயல்படுவோர் அதனைத் தவறாது எளிதாகப் பெறுவர், அதனால் இலக்கும் செயற்பாடும் வேண்டும் என முதுமொழிக் காஞ்சி ஆசிரியர் உரைக்கின்றார்.

*'நல் கூர்ந்த பத்து'* என்னும் ஒன்பதாம் பத்தில் யாரெல்லாம் எதனால் வறுமையுறுவார்கள் எனக் கூறப்படுகின்றது முறையில்லாத கொடுங்கோல் ஆட்சி செய்யும் அரசனின் நாடு வறுமை அடையும்; நோயுடையோன் பெறும் இன்பம் வறுமையானது; சொல்லை மதிக்காதாரிடம் சொல்லுதல் பயனற்றது; உளநலம் இல்லாதவன் பயனற்றவன் ஆவான்; நட்பில்லாதாரிடத்து உதவி நாடல் பயனற்றது. மதிப்பில்லாரிடத்துக் கோபம் கொள்ளுதலும் பயனற்றதாகும் என்றிவ்வாறான பயனற்றவை குறித்து முதுமொழிக் காஞ்சி குறிக்கும் செய்திகள் மனம் கொள்ளத்தக்கன.

தவிர்க்கக் கூடாதனவும், செய்யத்தக்கனவுமானவற்றை இறுதியாக அமைந்த *'தண்டாப் பத்து'* கூறுகின்றது. இப்பத்து கூறும் சில செய்திகளும் தொடர்களும் காட்டத்தக்கன.

*"ஓங்கல் வேண்டுவோன் உயர்மொழி தண்டான்"* (91)

*"வீங்கல் வேண்டுவோன் பல்புகழ் தண்டான்"* (92)

*"கற்றல் வேண்டுவோன் வழிபாடு தண்டான்"* (93)

*"நிற்றல் வேண்டுவோன் தவம் செயல் தண்டான்"* (94)

*"இன்பம் வேண்டுவோன் துன்பம் தண்டான்"* (97)

*"துன்பம் வேண்டுவோன் இன்பம் தண்டான்"* (98)

எனக் கூறுவதன் வழி, உயர்வை விரும்புகின்றவன் சிறந்தன பேசுதல் வேண்டும்; செல்வம் மிக வேண்டுவோன் புகழ்தரு செயல்களைச் செய்தல் வேண்டும்; கல்வி கற்க விரும்புவோன் ஆசிரியரை வழிபடல் வேண்டும்; ஓரிடத்தில் நிலைத்து நிற்க விரும்புவோன் தவம் செய்தல் வேண்டும்; இன்பம் வேண்டுவோன் துன்பத்தையும், துன்பம் வேண்டுவோன் இன்பத்தையும் விரும்புதல் வேண்டும்–தவிர்த்தல் கூடாது என்ற அறிவுறுத்தல்களை *'முதுமொழிக்காஞ்சி'* நூலாசிரியர் உரைத்திருக்கிறார்.

ஓரடிச் செய்யுளாய் அமையப் பெற்ற முதல் தமிழ் அறநூலான முதுமொழிக்காஞ்சி, வாழ்க்கையில் ஒவ்வொருவரும் உணரத்தக்கதும், செயல் செய்யத்தக்கதுமான செய்திகளை மிக எளிதாகவும், செறிவாகவும், அழுத்தம் திருத்தமாகவும், அனுபவ வெளிப்பாட்டின் உணர்வு நிலையாகவும் எடுத்துரைத்திருக்கிறது. இச் செய்திகள் மானிடர் வாழ்க்கையைச் செம்மைப்படுத்தி மேம்படுத்தும். அரசர் தம் ஆட்சிக் காலத்து நூலாதலின் அரசர்க்கும் வேண்டுவன இந்நூலில் கூறப் பெற்றுள்ளன. இளையோர்–முதியோர், ஆடவர்–பெண்டிர், கற்றார்–கல்லாதார் என எல்லாருக்குமான, எல்லாரும் பற்றியதான செய்திகளை–இந்நூல் எளிய சொற்களைப் பயன்படுத்தி, எதுகை மோனையில் சொற்கள் அமைய, இயைபும் எதிரும் உணர்த்தும் வகையில் ஒப்புநோக்கி வெளிப்படுத்தியிருக்கும் திறம் போற்றத்தக்கதாகும்.

# உரையாசிரியர்களின் பிறப்பியல் கோட்பாடு

முனைவர் **மு.கற்பகம்,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
தியாகராசர் கல்லூரி, மதுரை–9
கைபேசி : 96007 17875
99652 23462

இலக்கணம் என்பது மொழியின் இயல்பை உள்ளது உள்ளவாறு விளக்கும் அறிவியல். *'மொழி பழக்க வழக்கத்தின் சிக்கலான ஒழுங்குமுறை'* என ஹாக்கெட்டும், *'மொழி என்பது கருத்துக்களை வெளியிடுவதற்கான குறிகளின் அமைப்புமுறை'* எனச் சசூரும் குறிப்பிடுவதிலிருந்து மொழி ஆளுமை, எண்ணங்கள் மற்றும் உணர்வுகளைப் பரிமாறுவதற்குரிய கருவி எனலாம். முதலில் பேச்சுமொழியாக இருந்து பின்பு எழுத்து மொழியாக மாற்றம் பெற்றது. அவ்வாறு தோன்றிய எழுத்துக்களின் ஒலி வடிவம் பேச்சுறுப்புகளின் தொழிற்பாட்டினால் உருவாகின்றது. இத்தகு எழுத்துக்கள் பற்றி நம் பழமையான இலக்கண நூலான தொல்காப்பியம் எழுத்ததிகாரப் பகுதியில் சுட்டுகின்றது. தொல்காப்பிய எழுத்ததிகாரம் நூன்மரபு முதலாகக் குற்றியலுகரப் புணரியல் ஈறாக ஒன்பது இயல்களைக் கொண்டுள்ளது. இவற்றுள் தொல்காப்பியரின் பிறப்பியல் வழியாகச் சுட்டும் உரையாசிரியர் களின் பிறப்பியல் கோட்பாடுகளை விளக்க இவ்வாய்வு முற்படுகின்றது.

இலக்கணமாயினும் இலக்கியமாயினும் முறையே சூத்திரங்களின் வழியிலும் பா அமைப்பின் வழியிலான செய்யுட்களிலும் படைக்கப்பட்டன. அவற்றைப் பயின்று பொருள் கொள்வதில் உள்ள இடர்ப்பாடுகளை அறிந்தே (களவியல் உரைக்குப் பின்) முதன் முதலில் 11–ஆம் நூற்றாண்டிலே உரை எழுதும் மரபு உருவானது. அம்மரபினைத் தொடங்கிவைத்த பெருமை உரையாசிரியர் என்றழைக்கப்படும் இளம்பூரணரையே சாரும். தொல்காப்பியத்தின் வழி சுட்டப்படுகின்ற உரையாசிரியர்களின் பிறப்பியல் கோட்பாட்டிற்கு *இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பி.சா.சுப்பிரமணிய சாஸ்திரியார், வே.வேங்கடராசுலு ரெட்டியார்* உரைகளே அடிப்படைக் களங்களாகின்றன. தொல்காப்பிய எழுத்ததிகாரம் சுட்டுகின்ற ஒன்பது இயல்களுள் எழுத்துக்கள், எழுத்துக்களின் பெயர், முறை, அளபு, பிறப்பு, புணர்ச்சி, வடிவாகிய ஏழும் விளக்கமுறுகின்றன. இவைகளை இன்னும் சுருங்கக் கூறின் *எழுத்தியல், பிறப்பியல், புணரியல்* எனலாம்.

உடல் உறுப்புகள் மனிதன் உயிர் வாழ்வதற்கான பணியினைச் செய்வதற்காகப் படைக்கப்பட்டதெனினும் மனிதனின் முழுமையான கண்டுபிடிப்பான மொழியினை/எழுத்துக்களை ஒலிப்பதற்கும் பயன் படுகின்றன இன்றைய அறிவியல் வளர்ச்சியினால் ஒலிகளின் உச்சரிப்பும், அவை பிறக்கின்ற உறுப்புகளின் அடிப்படையில் ஒலிப்பிடங்களும் வரையறை செய்யப்பட்ட போதிலும் அறிவியல் வளர்ச்சி என்னவென்றே அறியாத காலத்தில் இன்றைய மொழியியல் வல்லுநர்களையெல்லாம் மிஞ்சுகின்ற வகையில் தொல்காப்பியரின் பிறப்பியல் கோட்பாடு அமைந்துள்ளமை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது

## எழுத்துக்கள் பிறக்கும் முறை :

காற்று உந்தியில் இருந்து தோன்றுகின்றது என்பதனை *'உந்தி முதலா முந்துவளி தோன்றி'* (எழுத்து: 83) என்கிறது தொல்காப்பியம். இதற்கு இளம்பூரணர் *'கொப்பூழ் அடியாக மேலே கிளர்கின்ற உதானன் என்னும் பெயரையுடைய வாயுதோன்றி'* என்கிறார் இவ்வாறு உந்தியின் வழியாகத் தோன்றுகின்ற காற்றானது ஒலியுறுப்புகளாக இருக்கின்ற எட்டு உறுப்புகளில் படுகின்றது. அவ்வாறு படுமிடத்து எட்டு உறுப்புகள் ஓர் உறுப்போடு ஓர் உறுப்பு பொருந்தி அமைதிபெற வேறுவேறு இயல்பினவாய் எழுத்துக்கள் பிறக்கும் என்கிறார் தொல்காப்பியர்.

## பேச்சுறுப்புகள்:

வளியானது தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைபெறுவதால் இவை மூன்றும் காற்றறைகளாகவும் பல், இதழ், நா, மூக்கு, அண்ணம் இவைகளோடு ஓர் உறுப்போடு ஓர் உறுப்பு பொருந்தி ஒலி எழுப்பப் பயன்படுவதால் அவைகளை ஒலிஎழுப்பிகள் என்றும் பிரிக்கலாம் இவ்வுறுப்புகளுள் வாய் என்ற ஒன்றை ஏன் சுட்டவில்லை? என்ற வினாவிற்கு விடையளிக்கும் வகையில் உரையாசிரியர் *'இதழ் போறலான் வாய் இதழெனப்பட்ட'*தென்று கூறுகிறார்.

**பேச்சுறுப்புகளின் தொழில்:**

மேற்சுட்டிய பேச்சுறுப்புகளுக்கு இயங்குதலும் இயக்கமற்று இருத்தலும் தொழிலாக இருக்கின்றது. இதனை எழுத்துக்களை ஒலிக்கும் போது வாய் முழுதுந் திறத்தலானும், சில எழுத்துக்கள் வாய் சிறிது திறந்துஞ் சிறிது மூடியுந் தொழில் செய்தலானும், சில எழுத்துக்கள் வாய் மூடுதலானும் ஒலிப்பன எனவும் அவை முறையே உயிர் எழுத்துக்களும் இடையெழுத்துக்களும் வல்லின மெல்லினங்களும் ஆமெனவும், ஆய்தவெழுத்தினை ஒலிக்குங்கால் வாய் பெரும்பாலும் மூடியே இருக்கும் எனவும் வெள்ளைவாரணர் (2001:90) குறிப்பிடுவது சாலப்பொருந்தும். இதனையே தொல்காப்பியரின் பிறப்பியலில் காண நேருகிறது.

**உயிரெழுத்துக்கள் :**

உயிர் எழுத்துக்களுக்கான பொதுப்பிறப்பினைச் சுட்டுகின்ற தொல்காப்பியம்,

*"பன்னீ ருயிருந் தந்நிலை திரியா*
*மிடற்றுப் பிறந்த வளியி னிசைக்கும்"* (எழுத்து: 84)

என்கிறது. தொண்டையின்கண் பிறந்த காற்றினால் பன்னிரண்டு உயிரும் தத்தம் நிலையில் ஒலிக்கும். இதற்கு உரையாசிரியர் "'*தந்நிலை திரியா*' என்றதனால் குற்றியலிகரம், குற்றியலுகரம் தந்நிலை திரியுமென்பது பெறப்பட்டது" என்பது ஒலிக்கும் அளவின் பொருட்டுத் திரிந்தது என்று குற்றியலிகரம், குற்றியலுகரத்திற்கான கோட்பாட்டினை வரையறை செய்கின்றார்.

தமிழ் மொழியின் முதல் எழுத்துக்களான அக்ர ஆகாரங்கள் வாயினை அங்காத்தல் செய்வதினால் பிறக்கும். இதற்கு வே.வேங்கடராகலு ரெட்டியார் *"அகர ஆகாரங்களை ஒலித்தற்கு அங்காத்தல் செய்யுமிடத்து அகரவொலிக்கும் இதழையும் கவுளையும் மிகக்குவிதல் செய்யாமையும் ஆகாரவொலிக்கு இதழையும் கவுளையும் மிகக்குவிதல் செய்யாமையும் வேண்டும்"*(எழுத்து: 85) என்கிறார். அங்காத்தல் செய்யுமிடத்து இதழ், கவுள் குவிதல் விரிதலுமாகிய இரண்டும் கவனத்திற் கொள்ள வேண்டும் என்பதனைக் கூறுகிறார்.

| எழுத்துக்கள் | பிறக்கும் இடம் | பிறக்கும் முறை |
|---|---|---|
| அ, ஆ | வாய் | அங்காத்தல் |
| இ, ஈ, எ, ஏ, ஐ | வாயின் இடைப்பகுதி | அண்பல் முதல்நா விளிம்புறல் |
| உ,ஊ,ஒ,ஓ,ஔ | இதழ் | இதழ் குவிதல் |
| க, ங | நா, அண்ணத்தின் முதல் பகுதி | முதல் நா அண்ணம் |
| ச, ஞ | நா, அண்ணத்தின் இடைப்பகுதி | இடை நா அண்ணம் |
| ட, ண | நா, அண்ணத்தின் நுனிப்பகுதி | நுனி நா அண்ணம் |
| த, ந | பல்லினது அடியினை நாவின் நுனி பொருந்தும் பகுதி | அண்ணம் நண்ணிய பல்முதல் மருங்கின் நாநுனி பரந்து மெய்யுற வொற்ற |
| ற, ன | மேல் நோக்கிய நுனிநா அண்ணத்தை வருடும் பகுதி | அணரி நுனிநா அண்ணம் ஒற்ற |
| ர, ழ | நுனி நா மேல்நோக்கி அண்ணத்தை வருடும் பகுதி | நுனிநா அணரி அண்ணம் வருட |
| ல | நாவின் இருமருங்கும் தடித்து அண்பல் முதலினை அழுத்த மாகப் பொருந்தும் இடம் | நா விளிம்பு வீங்கி அண்பல் முதலுற ஒற்ற |
| ள | நாவின் இருமருங்கும் தடித்து அண்ணத்தைத் தடவும் பகுதி | நா விளிம்பு வீங்கி அண்ணம் வருட |
| ப, ம | இதழ் இணையும் பகுதி | இதழ் இயைதல் |
| வ | மேற்பல்லும் கீழ் இதழும் இணையும் பகுதி | பல் இதழ் இயைதல் |
| ய | வாயின் இடைப்பகுதி | அண்ணம் சேர்ந்த மிடற்றெழு வளியிசை கண்ணுற்றடைய |

இகர, ஈகார, எகர, ஏகார, ஐகாரத்தின் பிறப்பினைச் சுட்டுமிடத்து இளம்பூரணர் *'பல்லினது அணிய இடத்தினை நாவினது அடியின் விளிம்பு சென்று உறுதலையுடைய'* என்கிறார். நச்சினார்க்கினியரோ *'அண்பல்லும் அடிநா விளிம்பும் உறப்பிறக்கும் வேறுபாடுடைய'* என்று குறிப்பிடுகின்றார். இது சற்று முரணானதாகவே உள்ளது. ஏனெனில் அடிநாவின் விளிம்பும் அண்பல்லுமுற இவை ஒலிப்பதில்லை. மேல்பல்லின் முதல் இடத்தை நாவினுடைய விளிம்பு பொருந்த இ, ஈ, எ, ஏ, ஐ பிறக்கும் எனலே பொருந்தும். இதனையே வே.வேங்கடராகலு ரெட்டியார், நச்சினார்க்கினியர் *'அண்பல் முதனா விளிம்புறல்'* என்பதனை *'அண்பல் முதனா விளிம்புறல்'* எனப் பிரித்துக் கூறியது அமைவுடையதன்று. *'அண்பன்முதல் நாவிளிம்பு உறல்'* எனப் பிரித்துப்

பொருள் கொள்ள வேண்டும் என்கிறார் (எழுத்து:86). பி.சா.சுப்பிரமணிய சாஸ்திரியார் இக்கருத்தில் உடன்பட்டு *'அண்பல் நண்ணிய பல்முதல்'* என்பது அதற்குப் பொருள் என்கிறார்.

இதழ் குவிதலினால் மட்டுமே உ, ஊ, ஒ, ஓ, ஔகாரங்கள் பிறக்கின்றன.

மேற்சுட்டிய பகுப்பில் உள்ள எழுத்துக்களுக்கான இடமும் முயற்சியும் ஒன்றாகத் தொல்காப்பியர் கூறியிருப்பினும் அவற்றில் சில எழுத்துக்களுக்கான முயற்சியில் சிறிது மாறுபாடு உண்டு என்பதனைத் *'தத்தம் திரிபே சிறிய வென்ப'* (எழுத்து:88) என்பதன் வாயிலாக விளக்கிச் செல்கின்றார் தொல்காப்பியர். இதற்கு இளம்பூரணர் *"எழுத்துக்கள் ஒரு தானத்துக் கூடிப் பிறக்குமெனப்பட்டன. அவ்வாறு கூடிப்பிறப்பினும் தத்தம் வேறுபாடுகளைச் சிறிய வேறுபாடுகளென்று சொல்லுவர்"* என்று எழுத்துக்களுக்கிடையேயான வேறுபாட்டினைத் தெளிவுபடுத்துகின்றார். இன்னும் சற்று மேலாக நச்சினார்க்கினியர் இவ்வேறுபாடுகளை *'நுண்ணுணர்வினான் அறிய முடியும்'* என்கிறார். பி.சா.சுப்பிரமணிய சாஸ்திரியார் 'இ, ஈ இரண்டும் ஓரிடத்திற் பிறப்பினும், எ, ஏ இவ்விரண்டும் வேறிடத்திற் பிறப்பினும், ஐகாரம் வேறிடத்திற் பிறப்பினும் அம்மூவகை எழுத்துக்களுக்கும் முயற்சியும் வேறுபடினும், அவ்வாறே, உகர, ஊகாரங்கட்கும் ஒகர, ஓகாரங்கட்கும் ஔகாரத்திற்கும் பிறப்பிடமும் முயற்சியும் வேறுபடும் என்கிறார்.

வே.வேங்கடராசுலு ரெட்டியார் இக்கூற்றினை தெளிவாக்குமிடத்து *"இவ்வாசிரியர் (தொல்காப்பியனார்) இகர ஈகார எகர ஏகார ஐகாரங்களாகிய ஐந்தெழுத்திற்கும் இடமும் முயற்சியும் ஒன்றாகக் கூறினாராயினும் எகர ஏகாரங்களுக்கு முயற்சியிற் சிறிது மாறுபாடு உண்டு எனத் தெரிகிறது"* என்கிறார். இஃது ஏற்புடைத்தே. ஏனெனில் எழுத்துக்களை உச்சரிக்கு மிடத்தே முயற்சி வேறுபாடு தெற்றென விளங்கும். மேலும் *"ஐகாரத்தில் கண்டத்துப் பிறக்கும் அகரம் முதலிலும் தாலுவிற் பிறக்கும் ஏகாரம் முடிவிலும் உளது"* என்பதும், அவ்வாறே *"ஔகாரத்தில் முதற்கண் அகர ஒலியும் பின்னர் ஒகார ஒலியும் உளது"* என்று கூறுவதும் பொருத்தமற்றதாகும். ஏனெனில் ஐகாரம் கண்டத்துப் பிறக்கும் அகரம் முதலிலும் தாலுவில் (அண்ணம்) பிறக்கும் இகரம் முடிவிலும் (எழுத்து: 54) உளது. அங்ஙனமே *"அகர உகரம் ஔகாரமாகும்"* (எழுத்து: 55) எனத் தொல்காப்பியரே சுட்டியிருக்க இங்ஙனம் குறிப்பிட்டது எதன் அடிப்படையில்?

## மெய்யொலிகள் :

மெய்யெழுத்துக்களை *வல்லினம், மெல்லினம், இடையினம்* என்று பகுத்த தொல்காப்பியர்,

*"மெல்லெழுத் தாறும் பிறப்பி னாக்கஞ்*
*சொல்லிய பள்ளி நிலையின வாயினும்*
*மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்"* (எழுத்து : 100)

என்கிறார். அவ்வாறெனில் இடையினமும் வல்லினமும் எதன் வளியின் இசைக்கும் என்ற வினாவிற்குப் பூரணரும் நச்சரும் பதிலிறுக்கின்றனர். *'யாப்புற என்றதனான் இடையெழுத்திற்கு மிடற்று வளியும் வல்லெழுத்திற்குத் தலைவளியும் கொள்க'* என்கின்றனர். இதற்கு சாஸ்திரியார் மெல்லெழுத்துக் களை ஒலிக்கும் போது வளியின் ஒரு பகுதி வாய்வழியாகவும் ஒரு பகுதி மூக்குவழியாகவும் செல்லுகின்றமையான் *'மூக்கின் வளியிசை'* என்றதற்கு *'மூக்கின் வளியிசையோடு'* எனவும் யாப்புற என்றதற்குப் *'பொருந்த'* எனவும் பொருள் கொள்ளின் *'யாப்புற'* என்றது மிகையாகாது என்று சுட்டுகின்றார். இக்கூற்றே பொருத்தமானதாக உள்ளது.

உரையாசிரியர்கள் இருவரும் நாமுதலும் அண்ணமுதலும் உற, க, ங வும், நாவது இடையும் அண்ணத்து இடையும் உற, ச, ஞவும், நாவது நுனியும் அண்ணத்து நுனியும் பொருந்த ட, ணவும் பிறக்கும் என்கின்றனர். இங்கு ஓர் உறுப்புத் தோன்றக் கூடிய இடத்தினையே தொல்காப்பியர் *'முதல்'* என்கிறார். இவ் ஆறெழுத்தும் மூவகைப் பிறப்பின (எழுத்து: 92) என்கிறார்.

ஆனால் ட, ண வானது நுனிநா நுனி அண்ணத்தைத் தொடுவதால் பிறக்கின்றதா எனில் நிச்சயம் இல்லை. ஏனெனில் நுனிநா மேல்நோக்கி அண்ணம் ஒற்ற ற, ன பிறக்கும் எனச் சுட்டப்பட்டிருக்கிறது. அவ்வாறெனில் ஆறெழுத்தும் மூவகைப் பிறப்பின என்பதற்கு மாறாக எட்டெழுத்தும் மூவகைப் பிறப்பின என்று சுட்டியிருத்தல் வேண்டும்.

***ற, ன*** : நாவின் நுனி மேல்நோக்கிச் சென்று அண்ணத்தை ஒற்ற றகார, னகாரமாகிய அவ்விரண்டும் பிறக்கும் (எழுத்து: 94). இதற்கு விளக்கம் அளிக்கும் வே.வேங்கடராகுலு ரெட்டியார் வடமொழியோடு ஒப்பிட்டு *"நாக்கின் நுனி மேனோக்கி வளைந்து மூர்த்தாவைத் (அண்ணத்தை) தொட டவர்க்கம் ஒலிக்கும் எனத் தெரிகின்றது. அம் முயற்சியை இவ்வாசிரியர் ற, னக் கட்குக் கூறியுள்ளார். இதனால் றகாரம் வடமொழி டகார ஒலியையுடையது என்பது புலனாதல் கூடும்"* என்கிறார். இஃது ஏற்புடைத்தல்ல. நாநுனி வளைந்து மூர்த்தாவைத் தொட ட, ண பிறக்கும். ஆனால் றகரம், னகரம் நுனிநா அண்ணம் ஒற்றப் பிறக்கும். வளைந்து ஒற்றுதலுக்கும் வளையாது ஒற்றுதலுக்கும் வேறுபாடு உண்டு. இதற்குக் காரணம் டகர, ணகரங்கள் பிறக்கும் இடம் மற்றும் முயற்சியினைத் தொல்காப்பியரும் சரி உரையாசிரியர்களும் சரி தெளிவுபடுத்தாமையே.

*த, ந* : தகர நகரங்களின் பிறப்பிடத்தைச் சுட்டும் தொல்காப்பியம் அண்ணத்தைப் பொருந்திய பல்லினது அணிய (அடியாகிய) இடத்தின் கண்ணே நாவினது நுனி பரந்து வடிவை உறும்படி ஒற்ற தாம் இனிதாகப் பிறக்கும் தகாரமும் நகாரமும் (எழுத்து: 93) என்கிறது.

இதற்கு விளக்கம் அளிக்கும் பூரணர் "*'முன்னே உறுப்புற்றமைய'* என்று வைத்துப் பின்னும் *'மெய்யுற'* என்றதனான் எல்லா எழுத்துக்களும் மெய்யுற்ற போதே இனிது பிறப்பென்பது கொள்ள" என்கிறார். அதாவது ஓர் உறுப்போடு மற்றொரு உறுப்பு பதியும் படியாகப் பொருந்தினால் மட்டுமே எழுத்துக்கள் இனிதாகப் பிறக்கும் எனில் உறுப்புக்கள் பொருந்தாத எழுத்துக்களே இல்லையா? என்ற வினா எழும். இதற்கு சாஸ்திரியார் *'மெய்யுறுதலின்றிப் பிறக்கும் உயிர்களும் இடையெழுத்துக்களும் இனிது பிறக்கவில்லை என்று கொள்ளல் வேண்டும்'* என்கிறார். இருப்பினும் இக்கூற்று முற்றிலும் ஏற்றுக் கொள்ள இயலா. ஏனெனில் உயிர்களுள் அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ தவிர்த்த மற்ற எழுத்துக்கள் அனைத்தும் மெய்யுறுதலினாலே பிறக்கின்றன. எனவே இதனை மெய்யுறுதலினால் பிறக்கின்ற எவ்வெழுத்துக்களாயினும் ஓர் உறுப்போடு மற்றொரு உறுப்புப் பதியும் படியாகப் பொருந்தினால் மட்டுமே இனிதாகப் பிறக்கும் எனலாம்.

*ர, ழ :* நுனிநா மேல் நோக்கி அண்ணத்தைத் தடவ ரகார ழகாரமாகிய அவ்விரண்டும் பிறக்கும் (எழுத்து: 95)

இதனடிப்படையில் ர, ழ இரண்டிற்கும் பிறக்கும் இடமும் முயற்சியும் ஒன்று என்றே தோன்றுகிறது. நாம் அவ்வெழுத்துக்களை அவ்வாறு உச்சரிக்கின்றோமாவெனின் இல்லை. ழகாரம் உச்சரிப்பதனைப் போன்று ரகாரம் உச்சரிப்பதில்லை. இதனையே சாஸ்திரியார் *"ரகரத்தை ஒலிக்கும் போது காற்றிற்கு வாயைவிட்டு வெளியிற் செல்ல எவ்வளவு இடன் இருக்கின்றதோ அவ்வளவு இடன் ழகரத்தை ஒலிக்கும் போது இல்லை"* என்கிறார். அவ்வாறிருக்க ரெட்டியார் ரகாரத்திற்கும் றகாரத்திற்கும் பிறப்பிடம் ஒன்றே. முயற்சியே வேறுபாடு. அஃதாவது றகாரத்திற்கு நுனிநா அண்ணத்தை ஒற்றும். ரகாரத்திற்கு நுனிநா அண்ணத்தை வருடும். ஒற்றுதலும் வருடுதலுமாகிய இவையே வேற்றுமை என்கிறார்.

அவ்வாறாயின் றகாரம், ஙகாரம், ரகாரம், ழகாரமாகிய இந்நான்கும் பிறக்கும் இடம் ஒன்று. முயற்சி மட்டும் வேறுவேறா என்ற ஐயம் எழும். எனவே ஒற்றுதல் என்பது வேறு. வருடுதல் என்பது வேறு. ரகாரம் ழகாரம் உச்சரிப்பு நிலையில் தொல்காப்பியர் கருத்துப்படி நாவானது மேல் நோக்கிச் சென்று வளைந்து வருடுகின்றது. ஏனெனில் வளைந்தால் மட்டுமே அண்ணத்தை வருட முடியும். றகரத்தை ஒலிக்க மேல்நோக்கிச் சென்ற நாவானது ஒற்றுதலோடு கீழே வருகின்றது. எனவே இவ்விரண்டிற்கும் இடமும் முயற்சியும் வேறுவேறே.

*ல, ள :* நாவினது விளிம்பு தடித்துப் பல்லினது அணிய (அடியில்) இடத்தைப் பொருந்த அவ்விடத்து (முதல்நா) அவ்வண்ணத்தை ஒற்ற லகாரமும் அதனைத் தடவ ளகாரமுமாக அவ்விரண்டும் பிறக்கும். பூரணரே முதல்நா என்பதனைத் தெளிவுபடுத்துகிறார். இவ்விடத்து முதல் நா என்று சுட்டுவது நுனிநா ஆகும்.

> ***"நாவிளிம்பு வீங்கி யண்பன் முதலுற***
> ***ஆவயி னண்ணை மொற்றவும் வருடவும்***
> ***லகார ளகார மாயிரண்டும் பிறக்கும்"*** (எழுத்து: 96)

இதற்கு நச்சர் *"நா மேனோக்கிச் சென்று தன் விளிம்பு அண்பல்லினடியிலே உறா நிற்க, அவ்விடத்து அவ்வண்ணத்தை அந் நாத் தீண்ட லகாரமாயும், அவ்விடத்து அண்ணத்தை அந்நாத் தடவ ளகாரமாயும் இவ்விரண்டெழுத்தும் பிறக்கும்"* என்கிறார்.

இதற்கு விளக்கம் அளிக்கும் ரெட்டியார் *"இவ்வுரைகளில் லகார ளகாரம் இரண்டற்கும் பிறப்பிடம் ஒன்றே எனவும் முயற்சி மாத்திரம் வேறுபாடு எனவும் போதரும்"* என்று இவர்கள் இருவருரையும் பொருந்தாமையினை விளக்கியுள்ளார். ஏனெனில் லகரம் பிறக்கும் இடம் அண்பல் முதல். ளகரம் பிறக்கும் இடம் அண்ணத்தில். எனவே தொல்காப்பிய நூற்பாவினை உரைகாரர்கள் இருவரும் கிடந்த கிடப்பில் பொருள் கொள்ளாது கொண்டு கூட்டி நா விளிம்பு வீங்கி அண்பல் முதலுற ஒற்ற லகாரமும் நா விளிம்பு வீங்கி அண்ணம் வருட ளகாரமும் பிறக்கும் எனக் கொளின் சரியான விளக்கம் கிடைத்திருக்கும்.

**பல்லிதழ் ஒலிகள் :**

*ப, ம :* கீழ் இதழும் மேல் இதழும் தம்மில் இயையப் பிறக்கும் பகாரமும் மகாரமும் (எழுத்து: 97)

*வ:* மேற்பல்லும் கீழ் இதழும் தம்மில் இயைய வகாரம் பிறக்கும் (எழுத்து: 98) எனப் பல்லிதழ் ஒலிகள் குறித்த கோட்பாடு சுட்டப்படுகிறது.

*ய :* யகரத்தின் பிறப்பினைத் தொல்காப்பியம் மேற்சுட்டிய பல் இதழ் ஒலிகளுக்கு முன்னர் வைத்திருக்கலாம்.

> ***"அண்ணஞ் சேர்ந்த மிடற்றெழு வளியிசை***
> ***கண்ணுற் றடைய யகாரம் பிறக்கும்"*** (எழுத்து : 99)

அண்ணத்தை நாச் சேர்ந்த இடத்து மிடற்றினின்றும் எழும் வளியானாகிய இசை அவ்வண்ணத்தை அணைந்து செறிய யகாரம் பிறக்கும் என்று பூரணர் கூற நச்சரின் கோட்பாடோ *"உந்தியிலெழுந்த காற்று மிடற்றிடத்துச் சேர்ந்த அதனால் பிறந்த ஓசை அண்ணத்தை யணைந்து உரலாணியிட்டாற் போலச் செறிய யகாரவொற்றுப் பிறக்கும்"* என்கிறார்.

தொல்காப்பியரே *'மிடற்றெழு வளியிசை'* என்று கூறியிருக்குமிடத்து நச்சர் சுட்டுவதனைப் போன்று அவ்வளவு முயற்சி தேவையா? என்ற வினா எழுகின்றது. அம்மட்டுமன்றி அண்ணத்தை நா சேர்ந்த பின்னரே மிடற்றினின்றும் எழும் வளியினாகிய இசை அண்ணத்தை அடையும். எனவே நச்சர் கூற்று ஏற்புடைத்தாயில்லை.

**சார்பெழுத்துக்கள் :**

சார்பெழுத்துக்களின் பிறப்பினைச் சுட்டுகின்ற தொல்காப்பியம் முதல் எழுத்துக்களைச் சார்ந்துவரின் அல்லாது தமக்கெனத் தனித்து நின்றொலிக்கும் இயல்பு இல்லையென ஆராய்ந்து வெளிப்படுத்தப்பட்ட மூன்று சார்பெழுத்துக்கள் தமக்குச் சார்பாகிய இடத்திலே தமக்குரிய இயல்பில் நடக்கும் (எழுத்து: 101) என்கிறது.

இதற்கு மேலும் சில விளக்கத்தில் தெளிவுபடுத்தும் பூரணர் *"ஒத்த காட்சி என்றதனான், ஆயுதத்திற்குக் குற்றெழுத்துச் சார்பேயெனினும் தலைவளியாற் பிறத்தலின், உயிரோடு புணர்ந்த வல்லெழுத்துச் சார்பாகவே பிறக்குமென்பது கொள்க. தம்மியல்பியலும் என்றதனான், அளபெடையும் உயிர்மெய்யும் தமக்கு அடியாகிய எழுத்துக்களது பிறப்பிடமே இடமாக வருமென்பது கொள்க"* என்று ஆய்தத்திற்கும், அளபெடைக்கும், உயிர்மெய்யுக்குமான பிறப்புக்கோட்பாட்டினை நிறுவுகின்றார். ஆனால் நச்சர் தொல்காப்பியர் சுட்டும் *'ஏனை ஒத்த காட்சியின் இயலும்'* என்பதற்கு ஒழிந்த ஆய்தம் தமக்குப் பொருந்தின நெஞ்சுவளியாற் பிறக்கும் என்று சுட்டுகின்றார். ஒழிந்த ஆய்தம் எனில் எங்ஙனம் ஏனை மூன்றாகும் ஏனெனில் *"சார்ந்து வரல் மரபின் மூன்றலங்கடையே"* (எழுத்து' 1) என்பது சார்பெழுத்துக்கள் மூன்றனையே. மேலும் நச்சர் நெஞ்சு வளியாற் பிறக்கும் என்றதும் பொருத்தமற்றதாகும்.

ஏனெனில் ஆய்தம் தலைவளியாற் பிறத்தல் என்றும் அது வல்லெழுத்துச் சார்பாகவே பிறக்கும் என்றும் பூரணர் குறிப்பிடுகின்றார்.

பஃது, அஃகடிய, முஃடீது, கஃறீது

இவைகளை நோக்குமிடத்து உரையாசிரியர் கூற்றே பொருத்தமுடைத்தாகின்றது

தொல்காப்பியப் பிறப்பியலின் வழியாக உந்தி முதலா எழும் வளி தலை, மிடறு, நெஞ்சு என்பதன்கண் நிலைபெற்று வெளிப்படும் போதெல்லாம் எழுத்தாகின்ற கோட்பாட்டினை உரையாசிரியர்கள் தம் உரைகளின் வழி விளக்கிச் சென்றுள்ளனர். இதனை நச்சர்,

*"நிலையும் வளியும் முயற்சியும் மூன்றும்*
*இயல நடப்பது எழுத்தெனப் படுமே"*

என்ற பழஞ் சூத்திரத்தின் வழியாக விளக்குகிறார். வேறு எந்த மொழிக்கும் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பே பிறப்பியல் குறித்துக் கோட்பாடு இத்தகு முறையில் வரையறுக்கப்பட்டிருக்குமா? எனில் நிச்சயம் இல்லை. ஆனால் இத்தகு பெருமை வாய்ந்த நம் மொழியினை இன்றைய நிலையில் நாம் கையாள்கின்ற தன்மையினை நோக்குமிடத்துப் பாரதி கூறிய *'மெல்லத் தமிழ் இனிச் சாகும்'* என்னும் கூற்று நடந்தேறிடுமோ என்ற அச்சம் தோன்றுகிறது அதனை நிறுவுவது போன்றே ஊடகங்களும் செயல்படுகின்றன தமிழ் எழுத்துக்களைச் சரியாக உச்சரிப்பதே அநாகரீகமான ஒன்று என்பது போன்ற உணர்வினை ஊடகங்கள் தோற்றுவிக்கின்றன. தமிழுக்கு மிகவும் பிற்பட்ட காலத்தில் தோன்றிய மலையாளமொழியின் இலக்கணநூலான கேரளபாணினீயத்தில் தமிழ் எழுத்துக்களின் உச்சரிப்புப் பற்றியும் மலையாள எழுத்துக்களின் உச்சரிப்புப் பற்றியும் கூறும்போது "இக்காலத்தில் தமிழில் உச்சாரணம் மிக்க மோசமாயிருக்கின்றது. . தமிழின் நிலைமையை நோக்கும் பொழுது மலையாளத்தில் உச்சாரணமுறை மிக்க உயர்ந்த நிலைமையதாகும் நகாரத்திற்கும் னகாரத்திற்கும் வெவ்வேறு எழுத்துக்கள் (வரிவடிவு) இல்லையாயினும், மலையாளிகள் இரண்டொலிகளையும் வேண்டுமிடத்து வேறுபடுத்தி உச்சரிக்கின்றனர் ரகார றகாரங்கட்கு எழுத்துக்கள் (வரிவடிவுகள்) தனித்தனியே யிருத்தலின் சிறுகுழந்தைகட்கும் உச்சாரணத்தில் தவறு வருதல் இல்லை" (தொ. எ. ஆ, ப 81) என்று பெருமிதத்தோடு கூறுப்படுகிறது. இவ்வாறு நம்மால் கூற இயலுமா? என்ற வினாவும் எழுகின்றது எனவே இந்நிலையினை மாற்ற நாம் முயல வேண்டும்.

# இளங்கோவின் காப்பிய உத்தியும் குறிக்கோளும்

பேறறிஞர் **தெ.திருஞானமூர்த்தி**

(1996–ஆம் ஆண்டு நவம்பர் மாத இதழில் வெளி வந்தது)

கதைவழிக் கலையழகோடு கருத்தை விளக்கும் ஓர் ஒப்பற்ற வடிவம் தான் காப்பியம். கருத்தின் நிலைபேற்றிலும் கலையழகின் வெளிப்பாட்டுத் திறனிலும் காப்பியம் தன் இறவாத் தன்மையை உறுதி செய்கின்றது. ஒரு காப்பியத்தின் மெய்யான கலையழகை அதன் உள்ளிருந்து காணலே சிறப்பானதும் முறையானதும் ஆகும். *"ஒரு காப்பியத்தைப் படித்து ஆராய முனையும் போது அதற்குத் திறன்கோல் அதனினின்றே வடிக்க வேண்டும். இன்னொரு காப்பியக் கோலைக் கைக்கொள்ள முற்படுவது நெறிப் பிசகாகும்"* என்பார் வ.சுப.மா. (கம்பர். ப.5) கால மாற்றத்தால் அழியாத சில மானுட உண்மைகளை ஓர் இலக்கியம் தன் அடிப்படைகளாகக் கொண்டு படைக்கப் பெறும் போது அவ்விலக்கியம் காலத்தால் அழியாத பேரிலக்கியமாகத் திகழ்கிறது.

இவ்வகையில் வினைக்கோட்பாடு தொல்மனிதன் முதல் இன்றைய மனிதன் வரை ஆதிக்கம் செலுத்தும் ஓர் ஆற்றல் மிக்க கோட்பாடாகும். இக்கோட்பாட்டை வைத்து இளங்கோ தம் காப்பியத்தைப் படைத்திருக்கின்றார். இது சிலம்பின் நிலைபேற்றிற்கு ஓர் அடிப்படையாய் அமைந்துள்ளது. இளங்கோவின் காப்பிய உத்திகளுள் இது தலையாயது. ஏனெனில், வினைக்கோட்பாட்டைத் தம் வாழ்வில் இணைத்துப் பாராத மனிதர் பெரும்பாலும் இலர். எனவே கோவலன் கதை அவர்தம் ஆழ் மனத்திற்கு ஓர் அருமருந்தாய் அமைந்து சிறக்கின்றது.

இளங்கோவின் காப்பிய உத்திகளுள் தலையாயதாகத் திகழும் வினைக்கோட்பாடே அவர்தம் காப்பியக் குறிக்கோளுமாகும். *"சமணர்களின் மெய்யியலின் நடுக்கருவாக இருப்பது அவர்களின் அணுக்கோட்பாடும் வினைக் (ஊழ்) கோட்பாடும் எனலாம்"* என்பர் அறிஞர். அணுக்கோட்பாடு பிரபஞ்சத்தைப் பற்றியது, வினைக்கோட்பாடு உயிர்களோடு தொடர்புடையது. எனவே, உயிர்களோடு தொடர்புடைய வினைக்கோட்பாட்டை இளங்கோ தம் காப்பியத்தில் செம்மையாக விளக்கிச் செல்கின்றார்.

ஒரு பிறவியில் ஒருவன் செய்த நல்வினைகளும் தீவினைகளும் மறு பிறவியிலும் தொடர்வதால் அவற்றினின்று ஒருவன் தப்பவே இயலாது எனச் சமணம் வலியுறுத்துகின்றது. இதனை இளங்கோவும் தம் காப்பியத்துள் உறுதி செய்துள்ளார்.

> *"ஒழிகென ஒழியாது ஊட்டும் வல்வினை*
> *இட்ட வித்தி னெதிர்வந் தெய்தி*
> *ஒட்டுங் காலை ஒழிக்கவு மொண்ணா"*

(சிலம்பு · 10:271–273)

எனக் கவுந்தியடிகளுக்குச் சாரணர் உரைப்பதாய் இளங்கோ கூறிச் செல்கிறார். விளை நிலத்திலிட்ட வித்து முளைத்துப் பயனளிக்குமாறு போல நல்வினை உரிய காலத்தில் நற்பயன் அளித்தலைத் தவிர்த்தல் இயலாது அது போலவே தீவினையும் தன் பயனைத் தந்தே நிற்கும். அதனை யாராலும் ஒழிக்க இயலாது என்னும் கருத்தைக் கோவலன் கதை வழியாகப் பாமரரும் உணரும் வகையில் தெளிவுபடுத்துகின்றார் இளங்கோ.

கட்டற்ற விடுதலை பெற்ற உயிரே கடவுள் என்றும், ஊற்றில் நீர் சுரப்பது போல் உயிருள் நல்வினை, தீவினையெனும் இருவினைகளும் சுரக்கின்றன என்றும் சமணம் கருதுகிறது. எனவே தீவினையே பல பிறப்புக்கும் துன்பங்களுக்கும் காரணம் என அது குறிப்பிடுகின்றது. *"ஊழ் கோட்பாட்டையே தனியோர் ஆற்றலாகச் சமணம் கருதுகின்றது. கடவுட் கோட்பாட்டை ஏறத்தாழ ஒரு துணையாற்றலாகவே இருத்துகின்றது"* (தமிழர் மெய்யியல், ப.162) என்பர். நல்லறிவும் நல்வினையும் இருவினைக் கட்டறுத்து வீடு பேறடையச் செய்யும் என அது வலியுறுத்துகின்றது. புறநானூற்றுப் புலவரும் இக்கருத்தை ஏற்றுப் பாடியுள்ளார்

> *"நீர்வழிப் படூஉம் புணைபோல, ஆருயிர்*
> *முறைவழிப் படூஉம் என்பது திறவோர்*
> *காட்சியின் தெளிந்தனம் ஆகலின்..."* (புறம் : 192 : 9–11)

எனக் குறிப்பிடுகின்றார். இதனையே இளங்கோவும் தம் காப்பியத்துள் வலியுறுத்துகின்றார்.

*"செய்வினை வழித்தாய் உயிர்செலு மென்பது*
*பொய்யில் காட்சியோர் பொருளுரை யாதலின்"*

(சிலம்பு : 28 : 167–168)

உயிர்கள் இறுதியாகச் சென்றடையும் தேயத்திற்குச் செல்ல உலக மாந்தர்கள் நல்வினை செய்து முயலவேண்டும் என அறைகூவல் விடுக்கின்றார்.

இளமை, செல்வம், யாக்கை நில்லாதவை; நல்வினை ஒன்றே நற்கதி சேர்க்கும்; எனவே பற்றுக்களை விடுத்துக் கட்டற்ற விடுதலையைப் பெறுங்கள் எனச் சிலம்பின் வழி வலியுறுத்துகின்றார் இளங்கோ.

இளமை வேகத்தில் இயங்கிய கோவலன் மாதவியைப் பிரிகையில் இளமை நில்லாதது என்பதை அறியச் செய்கின்றார். இளமையின் ஈர்ப்பில் வடுநீங்கு சிறப்பின் தன் மனையகம் மறந்து கிடந்தவனை யாண்டு சில அவனை அதன் பிடியிலிருந்து மின்வெட்டாய்த் துண்டிக்கிறது. கோவலனின் இளமை பாரா நிலைக்குக் காரணம் அவன் தன் பொருள் தளர்ச்சியால் ஏற்பட்ட தடுமாறு உளம் எனக் காட்டுகிறார் இளங்கோ. செல்வம் நில்லாதது என்பதை மலையொத்த செல்வத்தை உடையவனான கோவலன் வாழவழியின்றிப் புகாரை விட்டுப் புறப்படுவதிலிருந்தே அறிகிறோம். யாக்கை நில்லாதது என்பதைக் கோவலனின் துண்டிக்கப் பட்ட தலையும் உடலும் நமக்கு உணர்த்தி நிற்கின்றன.

கருத்துக்கள் செய்திகளாய்ச் சொல்லப்படுவதில் சிறப்பில்லை; உணருமாறு உணர்த்தப்படுவதில்தான் ஓர் இலக்கியத்தின் ஆற்றல் அடங்கியிருக்கின்றது. இவ்வகையில் மேற்காட்டிய இளங்கோவின் உணர்த்துமுறை காப்பிய உத்தி சிறப்பானதாகும். சிறந்த கருத்துக்களைக் காப்பியத்தில் உயர்ந்த பாத்திரங்களைக் கொண்டு பேச வைத்திருக் கின்றார் இளங்கோ. மாடலமறையோன் வழியாகவும் இக்கருத்துக்களை உணர்த்தியுள்ளார்.

வெற்றிச் சிறப்புக்கள் மலிந்த உன் முன்னோர் யாரும் இன்று இல்லை, அதனால் யாக்கை நில்லாதது என்பதை உணர்வாய். மல்லன்மாஞாலத்து வாழ்வோர் மருங்கில் செல்வம் நில்லாதது என்பதைக் கனகவிசயர் முதலிய

அரசர் நொடிப்பொழுதில் தம் செல்வத்தை இழந்தமையால் கண்டாய் நரைமுதிர் யாக்கை நீயும் கண்டனை. அதனால் இளமை நில்லாதது என்பதையும் உணர்ந்திருப்பாய். நின் வாழ்நாளில் ஐம்பது ஆண்டுகள் கழிந்த பின்னரும் அறக்களவேள்வி செய்யாது மறக்கள வேள்வி செய்வோம் ஆயினை எனச் செங்குட்டுவனுக்கு மாடலன் உணர்த்துகின்றான்.

*"பெருநல் வேள்வி நீசெயல் வேண்டும்*
*நாளைச் செய்குவம் அறமெனில் இன்றே*
*கேள்வி நல்லுயிர் நீங்கினு நீங்கும்*
*இதுவென வரைந்து வாழுநா ளுணர்ந்தோர்*
*முதுநீர் உலகில் முழுவது மில்லை"* (சிலம்பு : 28, 178–182)

எனச் சிறப்பான சூழலில் நிலையாமையையும் காப்பியக் குறிக்கோளையும் விளக்குகின்றார் இளங்கோ. வாழ்நாள் உணர்ந்தோர் முதுநீர் உலகில் முழுவதுமில்லை என்ற கருத்தைக் கதைவழியாகக் கோவலன் இறப்பில் காட்டிய கவிஞர் அதனை ஆழ உணரச் செய்யப் பாத்திரப் பேச்சு மூலமாகவும் விளக்கியுள்ளார்.

கதைவழி உணர்த்தல், பாத்திரப் பேச்சுவழி விளக்கல் என்ற இருநிலைகளுக்கு அப்பால் கவிக்கூற்றாகவும் காப்பியக் குறிக்கோளை வலியுறுத்தியுள்ளார் இளங்கோ. இது காப்பியக் குறிக்கோளைக் கற்பவர் மனதில் நிறுத்த முனையும் இளங்கோவின் காப்பிய உத்தியாகும்.

*"இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா*
*உளநாள் வரையாது ஒல்லுவ தொழியாது*
*செல்லுந் தேயத்துக் குறுதுணை தேடுமின்*
*மல்லன்மா ஞாலத்து வாழ்வி ரீங்கென்"*

(சிலம்பு: 30: 185, 199–202)

என ஞாலத்து மாந்தரெல்லாம் நல்வினை செய்து உயிரின் கட்டறுத்துக் கடவுள்நிலை எய்தவேண்டும் என்கிறார் இளங்கோ.

காப்பியக் குறிக்கோளை மூன்று நிலைகளில் உணரச் செய்த காப்பியக் கதையையும் அவ்வாறே பதியச் செய்துள்ளார். பல வடிவங்களில் வழங்கும் செல்வாக்குமிக்க நாடறிந்த கதையை இளங்கோ தன் காப்பியக்

கதையாகக் கொண்டார். அதனால் தான் கூறும் கோவலன் கதை கற்பார் நெஞ்சில் இடம்பெற வேண்டும் என்பதற்காகக் கண்ணகி, கோவலன் ஆகியோர் கண்ட கனவு வழியாகவும் மதுராபதித் தெய்வம் மூலமாகவும் சிலம்பின் கதையை முன்னோட்டமாக மூன்று நிலைகளில் கூறிச் சென்றுள்ளார்.

கோவலன், கண்ணகி முதலிய பாத்திரங்களையும் இம்முத்திற நெறியிலேயே இளங்கோ படைத்துள்ளார். மண் தேய்த்த புகழினான். கண்டேத்தும் செவ்வேள் எனக் கவியும், இம்மைச் செய்தன யானறி நல்வினை என மாடலனும் கதைப் போக்கில் கோவலனின் செயலும் பேச்சும் அவன் தன் பாத்திரத்தைக் கற்பார் நெஞ்சில் அழுத்தம் கொள்ளச் செய்கின்றன.

பாத்திரப்படைப்பில் குறைபாடுடையது என்றும் பாத்திரப் பண்பில் குறைபாடுடையது என்றும் கவுந்தியடிகளைப் பற்றிச் சிலப்பதிகாரத் திறனாய்வாளர்கள் இருவேறு நிலையில் பேசுவர். கவுந்திப் பாத்திரப் படைப்பில் இளங்கோவின் சமயச் சார்பும் இளங்கோ என்ற பாத்திரமும் பெரும்பங்கு வகிக்கின்றன. அதனால் "கண்ணகி கோவலர்க்குக் கிடைக்காத ஒரு பேறு கவுந்திக்குக் கிடைத்துவிடுகின்றது. *'பவந்தரு பாசம் கவுந்தி கெடுக'* எனக்கூறி அவளது தொல்வினையை அகற்றிப் பிறவித் துன்பத்திலிருந்து விடுதலை வழங்கி விடுகின்றார் அடிகள்" (கவுந்தி ப.86) என்பர் திறனாய்வாளர்.

*"செய்தவ மில்லோர்க்குத் தேவர் வரங்கொடார்*
*பொய்யுரையே யன்று பொருளுரையே............"*

(சிலம்பு : 9, 17–18)

என்பதால் சாரணர் கவுந்திக்கு மீட்சி தந்ததாகக் கூறினார். மேலும், *'பண்டைத் தொல்வினை பாறுக'* என்பது கவுந்தியின் உள்ளமே அல்லாமல் கோவலன், கண்ணகி உள்ளமாக அதனைக் கொள்ள இயலாது.

*"மாயங் கொல்லோ வல்வினை கொல்லோ*
*யானுளங் கலங்கி யாவதும் அறியேன்"*

(சிலம்பு : 16: 61–62)

எனத் தன் வாழ்வு சிதைந்து போனதற்கு வல்வினைதான் காரணமோ எனக் கோவலன் கொலைக்களக் காதையிலேதான் மயங்குகிறான். அதற்கு முன்னர் வேறு எங்கும் அவனுக்கு வினை பற்றிய சிந்தனை வந்ததாகத் தெரியவில்லை.

உயிர்கள் தம் சொந்த முயற்சியினாலேயே பிறவித்தளையிலிருந்து விடுபட முடியும் எனச் சமணம் குறிப்பிடுவதனால் அதனை வழங்கும் ஆற்றல் அருகதேவனுக்கும் சாரணர்க்கும் இல்லை என்பது உறுதி. சாரணர் கூற்றுப்படி பவந்தரு பாசம் கவுந்திக்குக் கெடவில்லை என்பதையும் கவுந்தியின் வேண்டுதலின்படி பந்தம் அறுபடவில்லை என்பதையும் அடுத்துவரும் காப்பிய நிகழ்ச்சிகள் உணர்த்தி நிற்கின்றன. மேற்கூறிய குற்றச் சாட்டில் உண்மை இல்லை என்பதனையே அவர்தம் என் மக்கள் காணீர் என்ற தொடரும் சாபமும், உண்ணா நோன்பும் விளக்கி நிற்கின்றன.

*"உம்மை வினைவந் துருத்த காலைச்*
*செம்மையி லோர்க்குச் செய்தவ முதவாது"*

(சிலம்பு: 23: 171–172)

என்பதால் அவர் தம் உயிரானது அடைய வேண்டிய துன்பத்தை அடைந்து நல்வினையால் கட்டற்ற விடுதலை அடைந்தது எனக் கொள்ளுதலே பொருத்தமானதாகும்.

இளங்கோ கவுந்தியடிகளைச் சார்ந்த நிலையில் சாரணர் போல் படைக்காது உணர்ச்சி அலைமோதும் பாத்திரமாகப் படைத்துள்ளார். இவ்வாறு படைக்கப் பெற்றதனால் அப்பாத்திரம் இன்றும் நம் நெஞ்சில் வாழக்கூடிய பாத்திரமாகத் திகழ்கிறது. மானுடப் பாத்திரங்கள் மனிதர்களுக்கான பலங்களோடும் பலவீனங்களோடும் படைக்கப் பெறுதல் வேண்டும். இல்லையேல் அப்பாத்திரம் நம்பகத் தன்மையை இழந்துவிடும். இவ்வரையறையை மீறிப் படைக்கப் பெறும் பாத்திரங்கள் கற்பார் நெஞ்சில் ஓர் மின்னலைப் போல மறைகின்ற பாத்திரமாகவோ அல்லது ஒரு விந்தைப் பாத்திரமாகவோ அமைந்துவிடும்.

கவுந்தி என்ற துறவுப் பாத்திரம் துறவைச் சிறப்பித்துப் பேசியபோதும் இல்லறத்தாரைப் புகழத் தவறவில்லை. மேலும் காப்பியத் தலைமைப் பாத்திரங்களைத் தம் மக்களாகக் கருதி தாய்மை கொண்டு சிறக்கின்றது உடன் வந்த கோவலன் தன் வழிகாட்டலில் மதுரைக்குச் சென்ற இடத்தில் கொலையுண்டான் என்றதும் உண்ணா நோன்பிருந்து உயிர் துறக்கக்கூடிய ஓர் ஒப்பற்ற மனித நேயம் மிக்க பாத்திரமாகத் திகழ்கிறது இவ்வகையில் அழியாக் காப்பியத்தின் உயிர்க்கலை ததும்பும் பாத்திரமாகக் கவுந்தியடிகள் பாத்திரம் சிலம்பில் திகழ்கிறது

பாத்திரப் படைப்பில் இளங்கோ கையாண்ட காப்பிய உத்தியாக இதனைக் கொள்ளலாம்.

முடிவுகள் :

வினைக் கோட்பாடு சிலம்பின் குறிக்கோளும் காப்பிய உத்தியும் ஆகும். பலவாறு வழங்கும் கோவலன் கதைகளுக்கு மத்தியில் தான் கூறவரும் கோவலன் கதை கற்பார் நெஞ்சில் ஆழப் பதிய வேண்டும் என எண்ணினார் இளங்கோ. அதனால்தான் சிலம்பின் கதையை முன்னோட்டமாக மூன்று முறை கூறிச் செல்கின்றார்

குறிக்கோளை விளக்கல், பாத்திரங்களைப் படைத்தல் என்ற இரு நிலைகளிலும் கதை, பாத்திரம், கவிக்கூற்று என்ற முந்நெறியே பெரும்பான்மையும் பின்பற்றப்பட்டிருக்கின்றன.

மானுடப் பாத்திரங்கள் மானுடத் தன்மையில் படைக்கப் பெற்றால் தான், அவை காப்பியத்தில் உயிர்க்கலை ததும்பும் பாத்திரமாகத் திகழும் என்பதே பாத்திரப்படைப்பில் இளங்கோ கைக்கொண்ட படைப்பாக்க நெறியாகும்.

# சங்கச் செய்திகள்

**01.02.2017** அன்று முற்பகல் **10.30** மணியளவில் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. துணைமுதல்வர் முனைவர் *கி.வேணுகா* அவர்கள் தமது உரையில் "நம் அன்னைத் தமிழுக்கு அணி செய்த தமிழறிஞர்களுள் ஒருவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஆவார். சிறந்த நினைவாற்றலால் *'கருவிலே திருவுடையார்'* என்னும் பெருமைக்குரியவர். தலபுராணங்கள், சிற்றிலக்கியக் கோவை, பிள்ளைத்தமிழ், அந்தாதி போன்றவைகளைப் பாடுவதில் வல்லவர். உ.வே.சா அவர்களின் ஆசிரியராகத் திகழ்ந்தவர்" என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

**02.02.2017** அன்று *மு.இராகவையங்கார்* மற்றும் *நா.வானமாமலை* ஆகியோரின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. மூன்றாமாண்டு இளம் இலக்கியம் மாணவி *மு.சிவகாமி* தமது உரையில் *"மு.இராகவையங்கார் அவர்கள் ஓர் ஆய்வுப் பேரறிஞர், 'செந்தமிழ்'* இதழின் ஆசியராகப் பணியாற்றிய பெருமைக்குரியவர், பதிப்புப் பணி, இலக்கணப் பணி மற்றும் அகராதிப் பணி எனப் பன்முகத் திறமையாளர்" என்று குறிப்பிட்டார். அடுத்ததாகப் பேசிய முதுகலை இரண்டாமாண்டு மாணவி *செ.திவ்யா*, "நா.வானமாமலை அவர்கள் நாட்டுப்புற இலக்கியத்தைப் பேணியவர், *'ஆராய்ச்சி'* இதழை நடத்திய இதழாளர், டி.லிட். பட்டம் பெற்றவர்" என்று குறிப்பிட்டார். முன்னதாக *மு.இராகவையங்கார்* மற்றும் *நா.வானமாமலை* ஆகியோரின் திருஉருவப் படங்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

**03.02.2017** அன்று முற்பகல் 11 மணியளவில் *எச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை* அவர்களின் நினைவேந்தல் நடைபெற்றது. இளம் இலக்கியம் மூன்றாமாண்டு மாணவி *இரா.சங்கீதா* தமது உரையில் "தமிழ்க் கிறித்துவ இலக்கியப் படைப்பாளர்களின் தனித்துவம் மிக்க தரமான அடையாளமாக விளங்குபவர் கிருட்டிணப்பிள்ளை ஆவார். பக்தி, விருந்தோம்பல், உதவும் பண்பு, கல்வியறிவு, வாய்மை, திருமறைப் புலமை, ஆத்தும தாகம், சிறந்த ஆசிரியர், பிறருடன் பழகும் தன்மை முதலிய நற்பண்புகளே மக்கள் அவரை அதிகமாக விரும்பியதற்குக் காரணம் ஆகும்" என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப்பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக *எச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை* அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

**04.02.2017** அன்று முற்பகல் **10.30** மணியளவில் வீரமாமுனிவர் அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. இளங்கலை மூன்றாமாண்டு மாணவி *பா.ஸ்ரீதேவி* தமது உரையில், "23 நூல்களைத் தமிழில் எழுதியதுடன், இயேசு கிறித்துவின் வாழ்க்கை தொடர்பான நிகழ்ச்சிகளையும் இயேசு கிறித்துவின் வளர்ப்புத் தந்தையாகிய புனித யோசேப்பின் வரலாற்றையும் தமிழ்ப் பண்பாட்டுக்கேற்பத் தேம்பாவணி என்ற பெருங்காவியமாக இயற்றியமை வீரமாமுனிவரின் தமிழ்ப் புலமைக்குச் சான்றாகும். தொன்னூல் விளக்கம் எனும் நூலில் ஐந்து இலக்கணங்களைத் தொகுத்தவர். கொடுந்தமிழ் எனும் நூலில் தமிழில் முதல்முதலாகப் பேச்சுத்தமிழை விவரிக்க முனைந்தவர். திருக்குறளின் அறத்துப்பாலையும், பொருட்பாலையும் இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்தவர். தமிழில் அமைந்த காப்பியங்களிலேயே, தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாத வெளிநாட்டவர் ஒருவரால் இயற்றப்பட்டது எனும் பெருமை தேம்பாவணிக்கே உண்டு. மேலும் வீரமாமுனிவரைப் போல, வேறெந்தக் காப்பியப் புலவரும் சிற்றிலக்கியம், அகராதி, இலக்கணம், உரைநடை எனப் பிற இலக்கிய வகைகளில் நூல்கள் படைத்தாரல்லர்" என்று வீரமாமுனிவரின் பெருமைகளைக் குறிப்பிட்டார்.

**04.02.2017** அன்று முற்பகல் **11** மணியளவில் தமிழறிஞர் *ச.வே.சுப்பிரமணியன்* அவர்களின் திருஉருவப் படத்திறப்பு விழா மற்றும் நான்காம் தமிழ்ச் சங்கத்தின் மாதாந்திர சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது. இவ்விழாவிற்குச் சங்கச் செயலாளர் வழக்கறிஞர் *ச.மாரியப்பமுரளி* அவர்கள் தலைமை தாங்கினார். தமிழறிஞர் *ச.வே.சுப்பிரமணியன்* அவர்களின் திருஉருவப்படத்தினைத் திறந்து வைத்து *'புறநானூற்றில் நயம்'* எனும் தலைப்பில் தமிழறிஞர் முதுமுனைவர் இரா.இளங்குமரனார் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். இச்சொற்பொழிவில் புறநானூறு எவ்விதம் பெண்ணின் பெருமையைப் பதிவு செய்துள்ளது என்று நயம்பட எடுத்துரைத்தார். புறநானூற்றின் 17 பெண்பாற் புலவர்கள் குறித்து விளக்கினார். மேலும் புறநானூற்றுப் பாடல்கள் காட்டும் பெண்கள் பற்றிக் கூறினார். வேள், வேளாளர், அமரர், குணப்பெண்டிர், காவற்பெண்டிர், கோப்பெண்டிர், எயினர், கரிகாலன் போன்ற பல்வேறு சொற்கள் குறித்து எளிமையாக ஆய்வு நோக்கில் விவரித்தார். இச்சொற்பொழிவில் சங்க ஆட்சிக்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தமிழ் ஆர்வலர்கள், செந்தமிழ்க் கல்லூரி, பிற கல்லூரிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் திரளாகக் கலந்து கொண்டனர். முதல்வர்(பொ.) *முனைவர் சு.விஜயன்* அவர்கள் வரவேற்புரையும் துணைமுதல்வர் *முனைவர் கி.வேணுகா* அவர்கள் நன்றியுரையும் நல்கினர்.

**07.02.2017** அன்று மணவை முஸ்தபா அவர்களின் மறைவுக்குச் சங்க வளாகத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது. இளங்கலை மூன்றாமாண்டு மாணவி *ஜெ.செல்வராணி* தமது உரையில், 'மணவை முஸ்தபா தமிழுக்கு உலக

## ஏப்ரல் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்



ஔவை. துரைசாமிப் பிள்ளை
( ஏப்ரல் 3 - 1981 )



பாரதிதாசன்
( ஏப்ரல் 21 - 1964 )



வ.சுப.மாணிக்கம்
( ஏப்ரல் 24 - 1989 )



ரா.பி.சேதுப்பிள்ளை
( ஏப்ரல் 25 - 1961 )



ச.தண்டபாணி தேசிகர்
( ஏப்ரல் 25 - 1990 )



சாலினி இளந்திரையன்
( ஏப்ரல் 28 - 2000 )



உ.வே.சா
( ஏப்ரல் 28 - 1942 )

பதிப்பாசிரியர் : **பேரா. இரா.சதாசிவம்**

**ஆசிரியர் குழு**

முதுமுனைவர் திரு. **இரா.இளங்குமரனார்**

முனைவர் திரு. **அ.அ.மணவாளன்**
முனைவர் திரு. **இராமசுந்தரம்**
முனைவர் திரு. **ம.திருமலை**
முனைவர் திரு. **இ.மறைமலை**
முனைவர் திரு. **செ.கந்தசாமி**
முனைவர் திரு. **பெ.சுயம்பு**
முனைவர் திரு. **முருகரத்தனம்**
முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் திரு. **மு.மணிவேல்**
முனைவர் திரு. **ம.வெ.சீனிவாசன்**
முனைவர் திரு. **இ.கி.ராமசாமி**
முனைவர் திரு. **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5507/56 Postal Registration Number TN/MA/130/2017-19
Date of Publication 20th of Every Month
Posted at Madurai BPC on 25th of Every Month



# செந்தமிழ்க் கல்லூரி

## நான்காம் தமிழ்ச்சங்கம், மதுரை

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.
54, தமிழ்ச்சங்கம் சாலை, மதுரை - 625 001. ☎0452 - 2343707 நிகரி : 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.லிட்., பி.ஏ., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வு பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புகள் உள்ளன**

முனைவர் **சு.விஜயன்**
முதல்வர் (பொ.), செந்தமிழ்க் கல்லூரி

**இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

| | |
|---|---|
| அனுப்புநர்,<br>**செயலாளர்,**<br>நான்காம் தமிழ்ச் சங்கம்,<br>54, தமிழ்ச் சங்கச் சாலை,<br>மதுரை – 625 001. தமிழ்நாடு. | From<br>**THE SECRETARY,**<br>The Fourth Tamil Sangam,<br>54, Tamil Sangam Road,<br>Madurai - 625 001. Tamilnadu. |

பெறுநர் / **To,**

Book Post

வெளியிடுபவர் : **ச.மாரியப்பமுரளி** M.A.,B.L., செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை – 625 001. **0452 - 2343707**
பதிப்பாசிரியர் : **இரா.சதாசிவம்** 2/861, இராசராசன் தெரு,
மதுரை – 625 020. அலைபேசி : **94874 45403**
அச்சிட்டோர் : **ஸ்ரீ பிரிண்டர்ஸ்** 147, கீழவெளி வீதி, மதுரை–1. அலைபேசி : **97894 95738**